Registered as a Newspaper

பக்கங்கள்
16+8

விலை
ரூ. 60

# உதயன்

சுடர் : 38
கதிர் : 169

ஞாயிற்றுக்கிழமை 14 மே 2023

சித்திரை 31 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## சதியால் ஆட்சியை கவிழ்க்கமுடியாது

அதனைத் தோற்கடிப்பேன் என்கிறார் ரணில்



கொழும்பு, மே 14
சதியூடாக எனது ஆட்சியைக் கவிழ்க்கமுடியாது. அதற்கு நான் இடமளிக்கமாட்டேன். அந்த முயற்சியை முழுமையாகத் தோற்கடிப்பேன் - இவ்வாறு ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க நேற்று இரவு சூளு »15

சூடு பிடிக்கும் கொழும்பு அரசியல்

# சதிப்புரட்சியின் ஊடாக ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி?

### உளவுத் தகவல்களையடுத்து தலைநகரில் படைக்குவிப்பு

**கொழும்பு, மே 14**

**அரசுக்கு கடும் அழுத்தங்களை பிரயோகித்து ஆட்சியைக் கவிழ்க்கும் வகையில் 'சதி' நடவடிக்கையொன்று இடம்பெறுவதாகக் கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவலையடுத்து கொழும்பில் முக்கியமான பல இடங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. ஆயுதம் தாங்கிய படையினர் களமிறக்கப்பட்டுள்ளனர். கவச வாகனங்கள் ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.** »15

வெடுக்குநாறிமலை

## ஆலய நிர்வாகத்துக்கு பொலிஸார் குடைச்சல்

வவுனியா, மே 14
வெடுக்குநாறி ஆலய விவகாரத்தில் நீதிமன்றத்தால் சிலைகள் மீளமைக்க அனுமதிக்கப்பட்டு ஆலய வழிபாடுகள் இடம்பெற்று வரும் நிலையில், ஆலய நிர்வாகத்தினருக்குத் தொடர்ச்சி »15

அரச ஆதரவுக் கும்பலின் ஏற்பாட்டில்

## சாப்பாட்டுப் பார்சலுக்காக விகாரைக்காகக் கூப்பாடு!

யாழ்ப்பாணம், மே 14
மக்கள் காணியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள தையிட்டி விகாரைக்கு ஆதரவு தெரிவித்து சாப்பாட்டுப் பார்சலுக்காக வந்தவர்களால்பேரணியொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. அரச ஆதரவுக் கும்பலால் முன்னெடுக் »15



## கிழக்கில் நேற்று பேரெழுச்சியுடன் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்

மக்கள் தன்னார்வமாக உதவினர்

விரிவு:- பக்.15

வவுனியாவில் பயங்கரம்;

## சூட்டுக்காயங்களுடன் 2 சடலங்கள் மீட்பு!

வவுனியா, மே 14
வவுனியாவில் குடும்பப்பெண்ணொருவரும், இளைஞர் ஒருவரும் சூட்டுக்காயங்களு »15

## சிறுமியைக் கடத்த முயன்ற இளைஞன் பொலிஸால் கைது

வடக்கில் தொடரும் சிறுவர் கடத்தல் முயற்சிகள்

முல்லைத்தீவு, மே 14
புதுக்குடியிருப்பு, கைவேலியில் சிறுமியைக் கடத்த முயன்ற இளைஞனை மக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத் »15

திருகோணமலையில்



## புத்தரின் குடியேற்றத்துக்கு எதிராக இரவிரவாகத் தொடரும் போராட்டம்

புத்தர் சிலை வைக்கப்படாது என்றுகூறி, போராட்டக்காரர்களை அப்புறப்படுத்தவும் முயற்சி

விரிவு:- பக்.09

## சிமெந்து விலை குறைப்பு

கொழும்பு, மே 14
50 கிலோகிராம் சிமெந்து பொதியின் விலை 150 ரூபாவால் »15

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது
ரூ.120,000/=
• அதிகபட்ச இரகசியதன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
011 200 88 88
சந்தை நிலைவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட முற்பணமானது முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
Fitch Rating: "A -" (lka)' கம்பனிப் பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி
செலான் வங்கி

## சஞ்சீவி

Digitized by Noolaham Foundation.

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 05 . 1934



மறைவு 13 . 05 . 2023

### துரைரட்ணம் ஜெயமணி
(ஓய்வுநிலை ஆசிரியை)

ஏழாலை தெற்கு சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட துரைரட்ணம் ஜெயமணி (ஓய்வுநிலை ஆசிரியை) நேற்று (13.05.2023) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி தவமணி தம்பதியரின் மகளும், அமரர் கந்தையா நேசையா துரைரட்ணம் (ஓய்வுநிலை ஆசிரியர்) அவர்களின் மனைவியும், காலஞ் சென்ற யேசுரட்ணம், ரட்ணமலர், அரசரட்ணம் (மட்டக்களப்பு), காலஞ்சென்ற கமலா தேவி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற ஜெயரூபன், ஜெயகரன் (ஓய்வுநிலை ஆசிரியர், கொழும்பு), அருட்பணி ஜெயநேசன் (தென்னிந்திய திருச்சபை - மூளாய்) ஆகியோரின் பாசமிகு தாயும், சசிகலா, பிறிசில்லா ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற ஏஞ்சலின்கம்சத்வனி, தபீத்தாஆரபி (ஆசிரியை உடுவில் மகளிர் கல்லூரி), அபிஷாபைரவி (பிரான்ஸ்), கரிஸ், லக்ஷனா (கொழும்பு), கோபிராஜ் (உடுப் பிட்டி), ஏனஸ்சஞ்சீவ் (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும், றேச்சல் கர்னிகா, கமாலியேல் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (14.05.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, ஏழாலை தெற்கு அமெரிக்கன் சிலோன் மிசன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளு மாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மகன்
ஜெயகரன் - 077 6340 519
ஜெய நேசன் - 077 196 2484

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 24867) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 05 . 1948



மறைவு 13 . 05 . 2023

### மயில்வாகனம் பரமேஸ்வரி

தாமோதரம்பிள்ளை வீதி, சப்பச்சிமாவடி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 97, ஆனந்தநகர், கிளிநொச்சியை வதிவிடமாகவும், சப்பச்சிமாவடியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் பரமேஸ்வரி நேற்று (13.05.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் அமரர்களான கார்த்திகேசு - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், அமரர்களான கந்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், மயில்வாகனம் (தபால் ஊழியர் கிளிநொச்சி) அவர்களின் அன்பு மனைவியும், அமரரான தமிழ்ச்செல்வி மற்றும் மகாதீபன், பொன்விழி ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரபாகரன், துர்க்கா ஆகியோரின் மாமியாரும், மதுசா, லிஷானி ஆகியோரின் அப்பம்மாவும், சுஜா, பிரதாப், சுதாஸ், பிரகாஸ் ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 39840) A-1

# முள்ளிவாய்க்கால் முற்றத்தில் மக்கள் ஒன்றிணைந்து சிரமதானம்

முல்லைத்தீவு, மே 14

முள்ளிவாய்க்கால்நினைவு முற்றத்தில் சிரமதானமும் முள்ளிவாய்க் கால் கஞ்சி விநியோகமும் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது.



இலங்கை அரசால் திட்டமிட்டு மேற் கொள்ளப்பட்ட தமிழ் இன அழிப்பு நினை வேந்தல் தமிழர்கள் வாழும் தேசமெங் கும் நேற்றுமுன்தினம் முதல் கடைப்பி டிக்கப்பட்டு வருகின்றது.

இனப்படுகொலை வாரத்தின் முதல் நாளான நேற்றுமுன்தினம் மாலை முள் ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் முள் ளிவாய்க்கால் மக்கள் மேலும் சிவில் அமைப்பு பிரதிநிதி கள் இணைந்து வடக்கு - கிழக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பின் ஏற்ப்பாட்டில் சிரமதானப் பணி முன்னெ டுக்கப் பட்ட தோடு முள்ளிவாய்க்கால் கஞ்சியும் பரிமாறப்பட்டது.

(அ-ஒ,5)

# ஆர்னோல்ட் தாக்கினாரென பொலிஸில் முறைப்பாடு

## தமிழ் அரசுக் கட்சி அலுவலகத்தில் நேற்று மாலை நடந்ததாகத் தெரிவிப்பு

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அலு வலகத்துக்குள் வைத்து யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர் இ.ஆர் னோல்ட்டால் தாக்கப்பட்டதாகத் தெரி வித்து யாழ்ப்பாணம் போதனா மருத்து வமனையில் ஒருவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

நேற்று மாலை 5.30 மணி அளவில் இந்தச் சம்பவம் நடந்தது. இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மார்ட்டீன் வீதி அலு வலகத்தில் யாழ். தொகுதிக்கிளை கூட்டம் நடந்தது. கூட்டம் முடிவடைந்த பின், அலுவலக வளாகத்தில் இந்தத் தாக்கு தல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினரும் சிவசேனை செயற்பாட்டாளருமான ஜெய மாறன் என்பவரே தாக்கப்பட்டார்.

'சிவசேனையில் உள்ள உனக்கு தமிழ் அரசுக் கட்சியில் என்ன வேலை? நாங் கள் சொல்லும் சட்டத்திட்டத்தின்படிதான் நடக்க வேண்டுமென கூறி, என் கன்னத் தில் அடித்தார். நான் நிலத்தில் விழுந்து விட்டேன். கட்சி பிரமுகர்கள், உறுப்பினர் கள் பலர் அங்கிருந்தனர். யாரும் எதுவும் செய்யவில்லை. நான் எனது சகோதர னுக்கு தொலைபேசியில் அறிவித்து, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன்' என தாக்கப்பட்ட ஜெயமாறன் குறிப் பிட்டார்.

(ஒ,இ)

## மரண அறிவித்தல்

### திரு.எஸ்தாக்கி டீயூக் கருணாகரன் (கருணா)



மலர்வு 02.01.1955

உதிர்வு 12.05.2023

யாழ்ப்பாணம் குருசோ வீதியைப் பிறப்பிட மாகவும், ஜா-எலயை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.எஸ்தாக்கி டீயூக் கருணாகரன் கடந்த (12.05.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியோகு எஸ்தாக்கி அந்தோனியாப்பிள்ளை (நேசம்) ஆகியோரின் அன்புப் புதல்வரும், காலஞ் சென்றவர்களான சொலமன் - எஸ்தர் ஆகி யோரின் அன்பு மருமகனும், குமுதினியின் அன்புக் கணவரும், ரெவர் ஜயனனின் (மலேசியா) பாசமிகு தந்தையும், குயின், ஆன் (நியூசிலாந்து), எலன், மனோகரன் (பிரான்ஸ்), குலேந்திரன், பொளின் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், டேவிட், யேசுதாசன், காலஞ்சென்ற நவரெட்ணம் மற்றும் மேரி ஜோசப்பின், சகாய தேவி, ஸ்ரனிலொஸ், சறோஜினி, ராஜினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டு யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள White House இல் திங்கட்கிழமை (15.05.2023) காலை 8.00 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பரி.கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலை யில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு.T.குலேந்திரன் (சகோதரன்)
0777 657 852

(CS 24868) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மன். கட்டுக்கரைக்குளம் அழிவடையும் ஆபத்தில்

## அருட்பணி நவரட்ணம் அடிகளார் சுட்டிக்காட்டு

**மன்னார், மே 14**

**மன்னார் மாவட்டத்தில் மிகப்பெரிய குளமாக உள்ள கட்டுக்கரைக்குளத்தை சுற்றியுள்ள காடுகளை அழித்து காணிகளை தம்வசப்படுத்தி வருகிறார்கள். இதனால் கட்டுக்கரைக்குளம் அழிவடையும் நிலை உருவாகின்றது. குளத்தைப் பாது காக்க மக்கள் பிரதிநிதிகள் முன்வரவேண்டும்.**

இவ்வாறு மன்னார் துயர்துடைப்பு மறு வாழ்வுச் சங்கத் தலைவர் அருட்பணி நவரட்ணம் அடிகளார் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் நிலவும் பிரச்சி னைகள் தொடர்பில் சமூக மட்ட அமைப் புகளின் பிரதிநிதிகளுக்கும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் களுக்குமிடையே அண்மையில் இடம் பெற்ற கலந்துரையாடலில் அவர் இத னைச் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் விவசாயிகளின் பிரதான குளமாக கட்டுக்கரைக்குளம் காணப்படுகிறது. இந்தக் குளத்தின் கீழ் பெரும்போகம், சிறுபோகம் மற்றும் தானியப் பயிர்ச்செய்கை என்பன மேற் கொள்ளப்படுகின்றன. அநேக விவசா யிகளின் ஜீவனோபாயமாக இந்தக் குளம் காணப்படுகிறது. தற்போது கட் டுக்கரைக்குளம் கவனிப்பாரற்று அழி வுறும் நிலை உருவாகியுள்ளது.

குளத்தைச் சுற்றியுள்ள காடுகளை அழித்து கட்டுக்கரைக்குளத்தின் காணி களை சிலர் தம்வசப்படுத்திக் கொண்டு வருகின்றார்கள். இவற்றைத் தடுத்து நிறுத்தி பாதுகாப்பது யார்? கட்டுக்கரைக் குளத்தின் எல்லைகள் எதுவரைக்கும் இருக்கின்றன என்பது குறித்து அதி காரிகளுக்கு தெளிவின்மை காணப்ப டுகிறது.

குளத்தைச் சரியான முறையில் பாது காக்காவிடின் விவசாயிகள் பாதிப்புற்று ஜீவனோபாயத்தை இழக்கநேரிடும். இந்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரி கள் கவனம் செலுத்தி குளத்தைப் பாது காக்க வேண்டும் - என்றார். (ச-60)



02nd Owner, GY-9XXX, Seven Seater, Sunroof, New Tyres & Painted newly, Electric Seats, 150,000 Km (Genuine Mileage) - Maharagama.

Townace Lotto CR27 - 1993



01st Owner, 1993, 252-XXXX Original Seat set (Town Ace), Adjustable Seats, Alloy Wheels
Excellent Condition
FOR ENQUIRIES - 0777 720 216



## மன்னாரில்

# சிறுமிகளைக் கடத்த முற்பட்ட சந்தேகநபர்களுக்கு மறியல்

மன்னார், மே 14

தலைமன்னார் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட தலைமன்னார் கிராமப் பகுதியில் சிறுமிகளுக்கு இனிப் புப் பொருள்களை வழங்கி அவர் களைக் கடத்த முற்பட்ட இரண்டு சந்தேகநபர்களையும் விளக்க மறியலில் வைக்குமாறு மன் னார் நீதிமன்று கட்டளை பிறப் பித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் பாட சாலை மாணவர்களை இலக்கு வைத்து கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன எனக் கூறப்படும் நிலையில், தலை மன்னார் கிராமப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை வியாபா ரப் பொருள்களை ஏற்றிவந்த வாகனமொன்றில் இருந்தவர் கள், சிறுமிகளுக்கு இனிப்புப் பொருள்களை வழங்கி அவர்க ளைக் கடத்த முற்பட்டுள்ளனர். அதன்போது பொதுமக்களின் உதவியுடன் அவர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

வாகனத்தில் இருந்த இருவரும் தலைமன்னார் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்ட நிலையில், கைது செய்யப்பட்ட இரண்டு சந் தேகநபர்கள் மீதும் நான்கு வழக்குகள் தொடரப்பட்டு நேற்று முன்தினம் மன்னார் நீதிமன்றில் அவர்களைப் பொலிஸார் முற்ப டுத்தினர்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான், இரு சந்தேகநபர்களை யும் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளதோடு, அன்றை யதினம் அடையாள அணி வகுப் புக்கு உட்படுத்துமாறும் கட்டளை பிறப்பித்தார். (ச-56)

## யாழ்.நகரில்

# சீர்கேடுகளுடன் இயங்கிய உணவகங்களுக்குச் 'சீல்'

யாழ்ப்பாணம், மே 14

யாழ்.நகரப் பகுதியில் சுகாதாரமற்ற முறையில் இயங்கிய இரண்டு உணவகங்களை மறுஅறி வித்தல்வரை 'சீல்' வைத்து மூடுமாறு யாழ். மேலதிக நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன் தினம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்.நகரிலுள்ள உணவகங்கள் கடந்த புதக் கிழமை யாழ். பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவன் தலைமையிலான பொதுச் சுகா தாரப் பரிசோதகர் குழுவால் பரிசோதனைக்குட் படுத்தப்பட்டன. இதன்போது கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள இரண்டு உணவகங் கள் பலவேறு வகையான சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கியமை அவதானிக்கப் பட்டது. அதனையடுத்து உணவகங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக 'பி' அறிக்கை யில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த உணவ கங்களை மறுஅறிவித்தல்வரை 'சீல்' வைத்து மூடுமாறும் உரிமையாளர்களை தலா ஒருலட் சம் சரீரப்பிணையில் செல்ல அனுமதிக்குமா றும் உத்தரவிட்டார். (ச-26)

# வடமாகாணத்தில் மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, மே 14

வடக்கு மாகாணத்தில் சில இடங்க ளில் மழைக்கு வாய்ப்புள்ளது என்று இலங்கை வளிமண்டலவி யல் திணைக்களம் அறிவுறுத்தி யுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்க ளம் விடுத்துள்ள ஊடக அறிக்கை யில் உள்ளதாவது:

நாட்டின் பல பிரதேசங்களில் கன மழை பெய்வதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. அதன் படி, மேல், சப்ரகமுவ, மத்திய, வட மேல், வடக்கு மாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங் களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும்.

மேலும், மின்னல் தாக்கங்களி னால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கை களை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின் றார்கள் - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னையர்தின நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 14

கோண்டாவில் கிழக்கு ஸ்ரநாராயணா சனசமூக நிலையத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளால் நடத்தப்படும் அன்னையர் தினக் கொண்டாட்ட நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் சனசமூக நிலைய முன்றிலில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கோண்டாவில் ஸ்ரீ வல்லிபுரநாதர் ஆலயத் தலைவர் எஸ்.கே.என்.தவராஜா, கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையத் தலைவர் ந.சிவாஸ்கர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-66)

## பதவி விலகாத ஆளுநர்களுக்கு எதிராக ஜனாதிபதி நடவடிக்கை

கொழும்பு, மே 14

உரிய அறிவித்தல் விடுத்தும் பதவிவிலக மறுக்கும் ஆளுநர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயாராகி வருகின்றார் என அரசியல் வட்டாரத் தகவல்கள் கசிந்துள்ளன.

ஜனாதிபதி செயலகத்தால் அறிவுறுத்தல்விடுத்தும் பதவிவிலகாத ஆளுநர்களை, ஜனாதிபதியின் பிரதி நிதியாகக் கருதவேண்டாம் என அரச அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தப்படவுள்ளது என சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது. அத்துடன் ஆளுநர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்காமல் இருப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது.

நீதிபதிகள் உள்ளடங்கிய குழுவொன்று அமைத்து ஆளுநர்களின் செயற்பாடுகள் குறித்து விசாரித்து அவர்களை பதவிநீக்கிவிட்டு புதியவர்களை நியமிப்பதற்கு ஏற்பாடுகளும் இடம்பெறுகின்றன என அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-44)



## வீதிக்குக் குறுக்காக நாய்: வாகனம் கவிழ்ந்து விபத்து

முல்லைத்தீவு, மே 14

புதுக்குடியிருப்பு கமநலசேவை நிலையத்துக்கு முன்னால் உள்ள வீதியில் வாகனமொன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது. வீதிக்குக் குறுக்காக நாய் ஒன்று சென்றதையடுத்து அந்த நாயைக் காப்பாற்றுவதற்காக வாகனத்தைத் திருப்பியபோதே இந்த விபத்துச் சம்பவித்துள்ளது.

புதுக்குடியிருப்பு பகுதியில் இருந்து இரணைப்பாலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த சிறிய பட்டா ரக வாகனமே விபத்துக்குள்ளானது. இருவர் காயங்களுக்குள்ளாகினர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-19)

# இனப்படுகொலை வாரம்: ஊர்திப் பவனி ஆரம்பம்

**வவுனியா, மே 14**

**முள்ளிவாய்க்காலில் தமிழினம் கொத்துக்கொத்தாக கொன்றொழிக்கப்பட்டதை அடையாளப்படுத்தி நினைகூரப்படும் முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தில், இறந்தோரை அஞ்சலிக்கும் வகையில் ஊர்திப் பவனி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**




தாயக நினைவேந்தல் அமைப்பினரின் ஏற்பாட்டில் இந்த ஊர்திப் பவனி முன்னெடுக்கப்படுகிறது. தாயகமெங்கும் 'முள்ளி வாய்க்கால் கஞ்சி' வழங்கும் நிகழ்வு இடம்பெற்றுவரும் நிலையில், தற்போது முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்திப் பவனியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவிலிருந்து நேற்று முன்தினம் ஆரம்பமாகிய ஊர்திப் பவனி வவுனியாவைச் சென்றடைந்தது. வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் மக்களின் அஞ்சலியைத் தொடர்ந்து ஊர்திப் பவனி வவுனியா நகரிலிருந்து மன்னார் நோக்கிப் பயணப்பட்டது. மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு அடுத்தடுத்த நாள்களில் பயணிக்கும் இந்த ஊர்திப் பவனி எதிர்வரும் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் முற்றத்தைச் சென்றடையவுள்ளது. (ச-18)

## நடைமுறைக்கு முரணாக குரங்குகள் ஏற்றுமதி!


### விலங்கு பாதுகாப்பு ஆர்வலர்களால் வழக்கு

கொழும்பு, மே 14

குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்த விடயத்தில் உரிய நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படவில்லை எனத் தெரிவித்து மேன்முறையீட்டு நீதிமன்றில் விலங்குப் பாதுகாப்பு ஆர்வலர்கள் 26 பேர் இணைந்து வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

வழக்கில் விவசாய அமைச்சர் மற்றும் அமைச்சரவை உறுப்பினர்கள் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

1937ஆம் ஆண்டின் இயற்கைச் சமநிலை பாதுகாப்பு தொடர்பான சட்டத்தின் அடிப்படையில் விலங்குகளை உயிருடனோ இறந்த நிலையிலோ வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யமுடியாது. மீறி ஏற்றுமதி செய்வதாக இருந்தால் அதற்குரிய அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டும். பரிமாற்ற அடிப்படையில் வெளிநாட்டு மிருகக்காட்சிச் சாலைகளுக்கு மிருகங்களையோ பறவைகளையோ அனுப்புவதாயின் விஞ்ஞானபூர்வ ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சீனாவுக்கு குரங்குகளை ஏற்றுமதி செய்யும் விடயத்தில் இந்த நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-6)



தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியினரால் நெல்லியடி பேருந்து நிலையப் பகுதியில் நேற்றையதினம் முள்ளிவாய்க்கால் கஞ்சி பொதுமக்களுக்குப் பரிமாறப்பட்டது. (ம)



## தேன் என்று தெரிவித்து சீனிப்பாணி விற்பனை!

### வவுனியாவில் ஒருவர் கைது

வவுனியா, மே 14

தேன் என்று தெரிவித்து சீனிப்பாணியை விற்பனை செய்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

வவுனியா சுகாதாரப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 263 போத்தல் சீனிப்பாணியும் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-18)

## 12 மணிநேர வேலை; நீடிக்க அரசு முயற்சி

### பொதுச் சேவைகள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 14

தொழிலாளர்களின் 8 மணித்தியால வேலைநேரத்தை 12 மணிநேரமாக நீடிப்பதற்கு அரசு முயற்சித்துவருகிறது. தொழிலாளர்கள் மீது பெரும் சுமையை சுமத்த முற்படுவது அநீதியானது என சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொதுச் சேவைகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அந்தச் சங்கத்தின் இணைச் செயலாளர் அன்டன் மார்கஸ் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

மேலதிகநேரக் கொடுப்பனவுகளை வழங்காமல் ஊழியர்களிடம் இருந்து 12 மணித்தியாலங்கள் வேலை வாங்குவதற்கு தொழிலதிபர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கும் யோசனையை அரசு முன்வைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வாரத்தில் 4 நாள்கள் மாத்திரம் வேலை வழங்குவதற்கும், மூன்று நாள்கள் சம்பளம் அற்ற விடுமுறை வழங்குவதற்கும் அரசு திட்டமிட்டுள்ளது.

அதுபோல ஞாயிறு விடுமுறையை நீக்கிவிட்டு, வாரத்தில் ஏதேனும் ஒரு நாளில் அந்த விடுமுறையை எடுப்பதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் அனைத்து தொழிற்சங்க அமைப்புகளும் ஒன்றிணைந்து இந்த முயற்சிகளைத் தோற்கடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களின் பங்கேற்புடன்

# பௌத்த ஆக்கிரமிப்புக்கு எதிராக தொடர் போராட்டங்கள் அவசியம்

## சிறிகாந்தா வலியுறுத்து




**யாழ்ப்பாணம், மே 14**

**தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்படும் சிங்கள - பௌத்த ஆக்கிரமிப்புக்கு எதிராக தமிழர் தாயகத்தில் ஒருமித்த குரலில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். முஸ்லிம்களையும் ஒன்றிணைத்து ஆகச் சிறந்த ஒருங்கிணைப்பு நடவடிக்கை ஊடாக இந்தப் போராட்டங்கள் இடம்பெறவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறிகாந்தா வலியுறுத்தினார்**

இதுதொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை (இன்று) திருகோணமலை நகரில், கடற்கரை வீதியில், விளையாட்டு அரங்குக்கு முன்னால் காணப்படும், நான்கு அரசமரங்கள் அமைந்திருக்கும் இடத்தில், புத்தபெருமானின் சிலை ஒன்று பிரதிஷ்டை செய்யப்படும் நிகழ்வு இடம்பெற உள்ளது. தாய்லாந்தில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ள, நான்கு அடி உயரமான புத்தர் சிலையுடன், இலங்கைக்கு வந்துள்ள 50 பௌத்த பிக்குகள் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

இலங்கையில் தமிழ்மக்களின் நீண்ட வரலாற்றில் பிரதான இடம்வகித்து வந்திருக்கும் திருகோணமலை மண்ணில், இந்தப் புத்தர் சிலை நாட்டப்படுவதற்கு போலியான காரணங்கள் வரலாற்றை திரிபுபடுத்தி முன்வைக்கப்பட்டுள்ளன. கடந்த சில ஆண்டுகளாக புத்தரின் சிலைகளை ஆயுதமாகப் பயன்படுத்தி, தொல்பொருள் திணைக்களத்தின் அனுசரணையோடு, தொடர்ச்சியாக நிகழ்த்தப்பட்டு வந்திருக்கும் பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் நீட்சியாகவே, இந்தப் புத்தர் சிலை பிரதிஷ்டை நிகழ்த்தப்பட உள்ளது. அரசாங்கத்தின் முழுமையான ஆதரவோடு தான் இது மேற்கொள்ளப்படுகின்றது என்பதில் எந்தவொரு சந்தேகமும் இருக்கமுடியாது.

இந்த, இன - மத ரீதியிலான ஆக்கிரமிப்புக்கு எதிராக, தமிழர் தரப்பில் எழுப்பப்படும் குரல்களை மௌனிக்க வைக்கும் நோக்கத்தோடு, வடித்தெடுத்த இனவெறியரான நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர மிரட்டல் தொனியில் எச்சரிக்கை விடுத்திருக்கின்றார். நிகழ்வைத் தடுத்து நிறுத்த முயன்றால், பெரும் அழிவுகள் ஏற்படும் என்றும் அவர் கர்ச்சித்திருக்கின்றார்.

அவரைப் போன்ற சிங்கள இனவெறியர்களின் மிரட்டல்கள், நீண்ட பல வருடங்களாக தமிழ் மக்களுக்கு பழகிப்போன சங்கதிகளாக இருந்தாலும் கூட, இனக்குரோதத்தைத் தூண்டுகின்ற இத்தகைய பேச்சுக்களை, இவரும் இவரைப் போன்றவர்களும் நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் தொடர்ந்து நிகழ்த்தி வந்திருக்கின்றார்கள்.

ஒரு சில வாரங்களுக்கு முன்னர், 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு முன்வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கட்சிகளின் கோரிக்கை பற்றிப் பேசிய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ, 13ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டால் கடந்த காலங்களில் இலங்கை சந்தித்த கலவரங்களைவிட, மிக மோசமான கலவரம் வெடிக்கும் என, தனக்கு உரிய பாணியில் மிரட்டல் விடுத்திருந்தார். நாட்டின் அமைதியை குலைக்கக் கூடிய அபாயத்தைக் கொண்டிருக்கும் இத்தகைய இனவெறிப் பேச்சுக்கள் தொடர்பில், எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. தமிழ் மக்களின் கோரிக்கைகளை சாத்தியமான அளவுக்கு மட்டுப்படுத்துவதற்கும், கட்டுப்படுத்துவதற்கும், இவ்வித இனவெறி எச்சரிக்கைகள் உதவும் என்று ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் நம்புவதே இதற்குக் காரணமாகும்.

இப்பொழுது திருகோணமலை நகரில் புத்தர் சிலையை முன்நிறுத்தி சிங்கள-பௌத்த பேரினவாதம் தன் விஸ்தரிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த முனைகின்றது. இந்தச் சூழ் நிலையில், திருகோணமலை மாவட்ட தமிழ்மக்கள் இந்தச் சவாலை நிதானத்தோடு எதிர்கொள்வதே உகந்தது ஆகும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பரவலாக தீவிரப்படுத்தப்படும் புத்தர் சிலை விவகாரங்கள் ஒன்றும் தானாக முளைத்தவை அல்ல, இவற்றுக்குப் பின்னால், சில மறைகரங்கள் செயற்படுவதாகவே சந்தேகிக்கவேண்டியுள்ளது. இந்த நிலையில், திருகோணமலையில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை, அந்த மாவட்டத்தோடு மட்டும் மட்டுப்படுத்திக் கொள்ளாமல், வடக்கு- கிழக்கு மாகாணங்களைத் தழுவிய நிலையில், ஒற்றுமையாக எதிர்கொள்வதே இப்போது தேவைப்படுகின்றது. இத்தகைய பிரச்சினைகளுக்ெல்லாம் எதிர்ப்புத் தெரிவித்தே சமீபத்தில் கடையடைப்பு மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் நிறுத்திக்கொள்ளாமல், எதிர்ப்பு நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்கொள்ளவேண்டும் என்பதே திருகோணமலை புத்தர்சிலை விவகாரம் உணர்த்தி நிற்கும் செய்தியாகும்.

கட்சி வேறுபாடின்றி தமிழ் மக்களை அணிதிரட்டி, பாதிக்கப்பட்டிருக்கும் முஸ்லிம் மக்களின் ஆதரவையும் கோரி, பெரும் அரசியல் போராட்டம் ஒன்றை மேற்கொள்வதே இன்றைய உடனடித் தேவையாகும் - என்றுள்ளது. (ம-26)

# டெங்குக் கட்டுப்பாடு விசேட கலந்துரை

யாழ்ப்பாணம், மே 14

தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்தும் விசேட கூட்டம் கடந்த வியாழக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. கூட்டத்தில் டெங்குப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவாக ஆலோசிக்கப்பட்டன.

தெல்லிப்பழைப் பிரதேசசபை உறுப்பினர் சு.சுதர்சன், தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் பொறுப்பதிகாரி மருத்துவ கலாநிதி ப.நந்தகுமார், தெல்லிப்பழை உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சங்கீதா கோகுலதர்ஷன், பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸ் அதிகாரிகள், கிராம அலுவலர்கள் எனப் பலர் பங்கேற்றனர். தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுவின் களத்தரிசிப்பு நடவடிக்கை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச-66)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும்.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். தாயாரின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு பணவரவு இருந்தாலும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணை கேட்பதை வாங்கித் தந்து மகிழ்விப்பீர்கள். சுபநிகழ்ச்சி ஏற்பாடாகும். வீண் அலைச்சல் ஏற்படும்.

**கடகம்:** பணவரவுக்குக் குறைவு இல்லை. மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். செலவுகள் ஏற்படும். குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் சில சிரமங்கள் ஏற்படும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். உங்களுக்குத் தேவையான உதவிகளும் கிடைக்கும். வீண் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கன்னி:** நீண்ட நாள்களாக நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம். காரியம் சாதகமாக முடியும்.

**துலாம்:** திடீர் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும்.

**தனுசு:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும்.

**மகரம்:** ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு குடும்பம் தொடர்பான பணிகளுக்காக சற்று அலைச்சல் ஏற்படும்.

**மீனம்:** மன உறுதியுடன் செயற்படுவீர்கள். செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## புறப்பட்டுவிட்டனவா பூதங்கள்?

குழந்தைகளைக் கடத்த முனைவதான சம்பவங்கள் வடக்கில் பதிவாகத் தொடங்கியுள்ளன. அண்மையில் மன்னார் நகரப்பகுதியை அண்மித்த பிரதேசத்தில் அடுத்தடுத்த இரு தினங்களில் இனிப்பினைக் காட்டி இரண்டு மாணவர்களை, வாகனமொன்றில் வந்தோர் கடத்த முயன்றனர் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்தப் பதற்றம் தணிவதற்குள் தலைமன்னார் கிராமப் பகுதியில் இரு மாணவிகளை இதேபாணியில் இனிப்பைக் காட்டி, கடத்தமுயன்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர். இப்போது முல்லைத்தீவிலும் தனியார் வகுப்பொன்றுக்குச் சென்ற மாணவியை மோட்டார் சைக்கிளில் வந்த நபர் கடத்திச் செல்லமுயன்றபோது, தெய்வாதீனமாக அதைக் கண்ணுற்ற பொதுமக்கள் மாணவியை மீட்டதுடன், கடத்த முயன்றவரையும் பிடித்துப் பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

இந்தக் குழந்தைபிடிச் சம்பவங்கள் வடக்கில் மட்டும் நிகழவில்லை. கடந்த சிலவாரங்களாக தென்னிலங்கையிலும் மாணவர்கள் குறிப்பாக மாணவிகள் மீது நிகழ்த்தப்படும் வன்முறைகளே பேசுபொருளாக இருக்கின்றது. அங்கும் ஒரு காமுகனால் ஏமாற்றி விடுதியொன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்ட மாணவியொருத்தி, நிர்வாணமாக மாடியிலிருந்து வீழ்ந்து உயிர்மாய்த்திருந்தார். இன்னொரு மாணவி வெற்றுடலாக ரயில் தண்டவாளத்தில் மீட்கப்பட்டிருந்தார். இன்னும் சில மாணவிகளும் காணாமற்போயிருக்கின்றனர். எனவே வடக்கில் மட்டுமல்லாது நாடளாவிய ரீதியில் மாணவர்களை இலக்கு வைத்து 'பிள்ளைபிடி பூதமொன்று' உலவ விடப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் பொதுமக்கள் மத்தியில் பரவலாக எழ ஆரம்பித்துள்ளது. ஏனெனில் காலத்துக்குக் காலம் அரசநிர்வாகம் மீதான அதிருப்தியை திசைதிருப்ப இதுபோன்ற பூதங்கள் உலா வருவதென்பது இலங்கையில் வாடிக்கையான விடயம். சிலவருடங்களுக்கு முன்னர் இளம் பெண்களை மட்டுமே குறிவைத்து 'கிறிஸ்பூதம்' உருவாக்கப்பட்டிருந்தது. இதுவும் தென்னிலங்கையிலேயே முதலில் உலாவியது. பின்னர் வடக்கு வரை இந்தக் 'கிறிஸ்பூதங்கள்' நடமாடி மக்களிடையே பெரும் அச்சத்தை உண்டாக்கியிருந்தன. எப்படி 'கிறிஸ்பூதங்களின்' ஆரம்பம் மர்மமானதாக இருந்ததோ அதேபோன்று அவற்றின் முடிவும் மாயமானதாக இருந்தது.


இப்போது 'பிள்ளைபிடிப் பூதமும்' அரசின் மீதான அதிருப்தியைச் சமாளிக்க அல்லது திசைதிருப்ப இறக்கிவிடப்பட்டதாக இருக்கலாம். என்னதான் சர்வதேச நாணயநிதியம் இலங்கைக்கு கடனுதவி வழங்கினாலும், உள்ளூர்ப் பொருளாதாரத்தில், உற்பத்தித் துறைகளில் முன்னேற்றத்தைக் காட்டினால் மட்டுமே நாடு உருப்படும். அவ்வாறில்லாமல் கடனிலேயே காலத்தைக் கழிக்க நினைத்தால், எத்தனை நாடுகள் கடன் வழங்கி முட்டுக்கொடுத்தாலும், இலங்கை இப்போதிருப்பதை விடவும் இன்னும் மோசமான நிலைக்கே செல்லும். அதனால் தான் மீண்டும் சீனி, கோதுமை மா போன்ற பொருள்களின் விலைகள் ஏறுமுகம் காணத் தொடங்கியிருக்கின்றன. அதைவிட அமைச்சுப்பதவிகள் தராததால் ரணிலின் பிரதான ஆதரவுத்தளமான மொட்டுக்கட்சியிலும் அவருக்கு எதிரான போக்கு மேற்கிளம்பி, மீண்டும் மஹிந்தவைப் பிரதமராக்கும் வேலைத்திட்டங்கள் மும்முரமடையத் தொடங்கியுள்ளன. இத்தகைய அரசியல், பொருளாதாரக் குழப்பங்கள் சூடுபிடிக்கும் முன்னர், அதைப் பற்றிய கவனத்தை வேறு பக்கம் ஈர்க்கும் நோக்குடன் இந்த 'பிள்ளைபிடிப் பூதங்கள்' அரச ஆதரவுடன் புறப்பட்டிருக்கலாம்.

இந்த 'பிள்ளைபிடிப் பூதங்கள்' உண்மையா? அல்லது காகம் இருக்க பனம்பழம் விழுந்ததைப்போல அங்கொன்றும் இங்கொன்றுமாக தற்செயலாக ஒரேமாதிரி நடந்தசம்பவங்களை ஒரு நேர்கோட்டில் பொருத்தி, 'பிள்ளைபிடிப் பூதங்கள்' புறப்பட்டிருக்கலாம் என்று நாம் தவறாகவும் அனுமானித்திருக்கலாம். ஆயினும் எப்போதும், எதற்கும் எச்சரிக்கையோடு இருப்பதில் தவறில்லையே. எனவே பெற்றோரே, உங்கள் பிள்ளைகள் மீது கண்களை இன்னும் கவனமாக வைத்திருங்கள். உங்கள் காவல் பலமாக இருந்தால் எந்தப் பூதத்தாலும் எதுவும் செய்துவிட முடியாது. எங்கள் பிள்ளைகளின் பாதுகாப்பு எங்கள் கைகளிலேயே.

**நாளொரு நல்வார்த்தை**

"நீங்கள் அனுபவத்தை புத்திசாலித்தனமாகப் பயன்படுத்தினால் எதுவும் நேரவிரயம் இல்லை"

– அகஸ்டே ரோடின்




# படைப்புழுக்கள் தீவிரம் அழிவுறும் சிறுபோகம்!

## கிளிநொச்சி விவசாயிகள் கவலை

**கிளிநொச்சி, மே 14**

**கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகளிலும் சிறுபோக நெற்செய்கையில் படைப்புழுத்தாக்கம் அதிகரித்துள்ளதால் நெற்செய்கை பாதிப்புற்று அழிவுறும் நிலைமை ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**



இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு ஒரு மாதம் கடந்துள்ள நிலையில் படைப்புழுவின் தாக்கம் சடுதியாக அதிகரித்துள்ளது. கிளிநொச்சி உருத்திரபுரம், கணேசபுரம், முரசுமோட்டை ஆகிய பகுதியில் படைப்புழுத்தாக்கம் வீரியமடைந்து வருகிறது. படைப்புழுத் தாக்கத்தால் வயலில் காணப்படும் நெற்பயிர்கள் சிதைந்து அழிவடைகின்றன. கடந்த காலபோக நெற்செய்கையில் மேற்கொள்ளப்பட்ட நெல்லுக்கு உரியவிலை கிடைக்கப்பெறாததால் விற்பனை செய்யமுடியாதுள்ளது. இந்தநிலையில் சிறுபோக நெற்செய்கையில் படைப்புழுத்தாக்கம் பாதிப்பை ஏற்படுத்துகிறது. அதனைக் கட்டுப்படுத்த கிருமிநாசினியை அதிகவிலை கொடுத்துப் பெறவேண்டியுள்ளது. நெருக்கடிகளுக்கு மத்தியில் விவசாய நடவடிக்கையை முன்னெடுக்கின்ற விவசாயிகள் இதனால் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர் என அவர்கள் மேலும் சுட்டிக்காட்டினர். (ச-113)

# இடைவிலகிய மாணவர்கள் விவரங்களை சமர்ப்பிக்குக

## வடக்கு மாகாண ஆளுநர் பணிப்பு

வடக்கு மாகாணப் பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மாணவர்களின் விவரங்களை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் அவர் அனுப்பிவைத்த அறிக்கையில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாணப் பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் இடைவிலகல்கள் இடம்பெறுவது தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. பாடசாலை மாணவர்கள் இடைவிலகுவது அல்லது கட்டாய விடுகைப் பத்திரம் வழங்குவது தொடர்பில் உரிய அதிகாரிகளின் தலையீடு பின்பற்றப்பட்டிருக்கவேண்டும். பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்கள் சமூகத்தில் என்ன செய்கிறார்கள்? என்பது தொடர்பில் அவதானிப்புகள் இடம்பெறவேண்டும். கடந்த மூன்று வருடங்களில் பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மாணவர்களின் பெயர்ப்பட்டியலை அனுப்பி வையுங்கள் என அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் வடக்கு மாகாண ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார். (ச-20)

**நாளை**

**15.05.2023**

**திங்கட்கிழமை**

**வைகாசி 01**

சுபநேரம் : 11.53 - 01.23

ராகுகாலம் : 07.23 - 08.53

**ஏகாதசி விரதம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாபயவின் பாதையில் ரணில் அரசாங்கம் பயணம்

## சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு



**கொழும்பு, மே 14**

**கோத்தாபய, கப்ரால் சென்ற தவறான பாதையில் தற்போதைய அரசாங்கமும் செல்கிறது. 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக நாணயம் அச்சிட அரசாங்கம் தீர்மானித்துள்ளது. நாணயம் அச்சிடுவதைத் தவிர இந்த அரசாங்கத்திடம் வேறு வழிகள் இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினரான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மொத்த தேசிய உற்பத்தியை அதிகரித்தால் மாத்திரமே நடைமுறையில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். திறைசேரி முறிகள் தொடர்பான சட்டவரைவை தற்போது அவசரமாகக் கொண்டு வந்துள்ளனர். இது முறையாகக் கலந்துரையாடப்படாது கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த அரசாங்கமும் முன்னாள் அரசாங்கம் போன்றே செயற்படுகின்றது. கோத்தாபய ராஜபக்ச மற்றும் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோர் சென்ற பாதையில்தான் தற்போதைய அரசாங்கமும் செல்கின்றது. இவர்களால்தான் அதிகளவில் பணத்தை அச்சிடவும், அதிக வட்டி வீதத்தையும் அறவிட நேர்ந்தது. வரவு - செலவுத் திட்டத்தின் பற்றாக்குறையையும் கடந்து நாங்கள் செல்கின்றோம். வருமானத்தை விடவும் செலவு அதிகரித்து மீண்டும் விழப் போகின்றோம். சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய அரச மற்றும் தேசிய கடன்களை மறுசீரமைக்கும்போது சமூகக் கட்டமைப்பில் பெரும் பிரச்சினைகள் தோற்றம் பெறும். ஆகவே சமூகக் கட்டமைப்பின் தோற்றம் பெறும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசாங்கம் விசேடகவனம் செலுத்த வேண்டும் - என்றார். (ம)

# தகுதியற்றோருக்கு நலன்புரித் திட்டம்

## மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

கொழும்பு, மே 14

சமுர்த்திக் கொடுப்பனவுகள் உள்ளிட்ட நலன்புரி உதவிகளை வழங்கும்போது தகுதியில்லாதவர்களுக்கும் அவை வழங்கப்படுகின்றன என்று முன்னாள் ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமுர்த்திக் கொடுப்பனவு விடயத்தில் தகுதியில்லாதவர்களுக்கும் அது கிடைப்பதாக நாங்கள் தொடர்ந்து தெரிவித்து வருகிறோம். ஆனால் தகுதி அற்றவர்களை நீக்குவதற்கு யாரும் முற்படுவதில்லை. அதனை நீக்க முற்படும்போது ஏற்படுகின்ற அரசியல் தலையீடு காரணமாக தகுதியற்றவர்கள் தொடர்ந்தும் அந்த வரப்பிரசாதங்களை அனுபவித்து வருகின்றனர். இதேவேளை அனைத்துத் துறைகளும் பொருளாதார நெருக்கடிகளில் சிக்கியுள்ளன. விவசாயிகள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயத்துறையில் ஏற்படும் வீழ்ச்சிநிலை நாட்டை நேரடியாகப் பாதிக்கும். எனவே விவசாயத்தைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்றார். (ம)

# நிவாரணத் திட்டங்களை பரவலாக்கவேண்டும்!

## கபீர் ஹாசிம் வலியுறுத்து



கொழும்பு, மே 14

நாட்டில் 22 மில்லியன் சனத்தொகையில் 55 லட்சம் மக்கள் வறுமையில் இருக்கின்றனர். அதேநேரம் நிவாரணம் வழங்குவதில் உலகில் குறைந்த நிவாரணம் வழங்கும் நாடு இலங்கையாகும். அதனால் நிவாரண வீதத்தை அதிகரிக்கவேண்டும் என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். கபீர் ஹாசிம் மேலும் தெரிவித்ததாவது:

அரசாங்கத்தின் நலன்புரி சட்டத்தை வரவேற்கிறோம். ஆனால் இந்த வேலைத்திட்டத்தை அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்வதில்லை. 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நாட்டின் வறுமைக்கோடு நூற்றுக்கு 11 வீதமாக இருந்தது. ஆனால் உலக வங்கியின் அறிக்கையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வறுமை நிலை வளர்ச்சியடைந்து செல்கின்றது. இன்று வறுமைக்கோடு 25 வீதமாக அதிகரித்துள்ளது. நாட்டில் 22 மில்லியன் மக்கள் தொகையில் 55 இலட்சம் பேர் வறுமை நிலையில் இருக்கின்றனர்.

உலகில் குறைந்த நிவாரணம் வழங்கும் நாடு இலங்கையாகும். மொத்தத் தேசிய உற்பத்தியில் நூற்றுக்கு 0.6 வீதமே நிவாரணத்துக்காக ஒதுக்கப்படுகிறது. இது போதுமானதாக இல்லை. அதேநேரம் நிவாரணம் இலக்குப்படுத்தும் வீதமும் குறைவாகும். அதனால் நிவாரண வீதத்தை அதிகரிப்பதுடன் அதனை இலக்குப்படுத்தும் வீதத்தையும் அதிகரிக்கவேண்டும் - என்றார். (ம)

# பொருளாதாரக் கொள்கை ஒருபோதும் மாறக்கூடாது!

## நாமல் தெரிவிப்பு



கொழும்பு, மே 14

ஆட்சி மாறினாலும், பொருளாதாரக் கொள்கைகள் மாற்றமடையக் கூடாது. தேசியக் கொள்கை வகுப்பு ஆணைக்குழுவை அரசமைப்பின் ஊடாக அமைக்க விசேடகவனம் செலுத்தவேண்டும் என்று பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் பொருளாதார மீட்சிக்கான குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகாலக் கொள்கைகளை வகுப்பது தொடர்பில் நாடாளுமன்றத்தில் விசேட உபகுழு அமைக்கப்பட்டது. கொள்கை உருவாக்கத்துக்காக அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங்கள் உட்பட பல்வேறு தரப்பினருடன் பேச்சுக்களை மேற்கொண்டோம். தேசிய கொள்கை தொடர்பான ஆணைக்குழுவை அமைக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் எதிர்க்கட்சிகள் உட்பட நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளும் தங்களின் நிலைப்பாட்டை முன்வைக்க வேண்டும். நிலையான சிறந்த மாற்றத்துக்கு அனைவரும் ஒன்றுபடவேண்டும். அரசாங்கங்கள் மாற்றமடையும் போது பொருளாதாரக் கொள்கைகள் மாற்றமடைந்தால் ஒருபோதும் முன்னேற்றமடையமுடியாது. ஆட்சி மாறினாலும் பொருளாதாரக் கொள்கை மாற்றமடையக் கூடாது - என்றார். (ம)

# அரசியல் வாய்ப்புக்களை வழங்குகின்றதா சமுர்த்தி?

## ஜே.வி.பி. கேள்வி

கொழும்பு, மே 14

மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதிகள், மீண்டும் மக்கள் மத்தியில் செல்வதற்கான பாதையாக சமுர்த்தி போன்ற நலன்புரி வேலைத்திட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றனவா? என்ற சந்தேகம் காணப்படுகிறது என ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமூகப் பாதுகாப்புத் தொடர்பான விடயத்துடன் நலன்புரி விடயங்கள் தொடர்புபடுகின்றன. தற்போது சமூகப் பாதுகாப்புக்கான கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட விடயங்கள் வீழ்ச்சியடைந்து செல்லும் போது அது தொடர்பில் பரந்துபட்ட வேலைத்திட்டங்கள் அவசியமாகவுள்ளன.

தற்போது இவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும்போது அரசியல்மயப்படுத்தி செய்வது தொடர்பாக விமர்சனங்கள் உள்ளன. இதேவேளை மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதிகளுக்கு மீண்டும் கிராமங்களுக்கு செல்வதற்கான பாதையாக சமுர்த்தி போன்ற நலன்புரி வேலைத்திட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றனவா? என்ற சந்தேகங்கள் நிலவுகின்றன - என்றார். (ம)

# அரசுடன் இணையத் தீர்மானிக்கவில்லை

## மனோ எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, மே 14

அரசாங்கத்துடன் இணைவது தொடர்பில் தமது கட்சி தீர்மானிக்கவில்லை என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அரசுடன் இணைய விரும்புபவர்கள் அவர்களது கட்சியுடன் வந்து சேர முடியும் என்று ஜனாதிபதி கூறினார். அப்படி முடியாதுவிட்டால் தனியே வரமுடியும் என்று அறிவித்தார். அப்படியும் முடியாதுவிட்டால் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டே அரசாங்கத்துக்காக வேலை செய்யலாம் என்றும், அதற்கான குழுக்களை நிறுவி பொறுப்புக்களைப் பகிர்ந்து கொடுப்போம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். எனினும், அரசாங்கத்துடன் இணைந்து வேலைசெய்வது தொடர்பில் எங்கள் கட்சி தீர்மானிக்கவில்லை - என்றார். (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தரின் ...

தமிழர் தலைநகர் திருகோணமலையில் 4 அடி புத்தர் சிலையை வைப்பதற்கு எதிராக தமிழ்த் தேசியப் பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டம் நேற்று இரவிரவாகத் தொடர்ந்தது.

270 ஆண்டுகளுக்கு முன் தாய்லாந்திலிருந்து திருகோணமலைக்கு வந்து இறங்கியதாகக் கூறப்படும் பிக்குகளை நினைவுகூரும் முகமாகவும், அவர்களை கௌரவப்படுத்தும் முகமாகவும் அவர்கள் வந்து இறங்கியதாக மகாவம்சத்தில் கூறப்படும் திருகோணமலை நெல்சன் திரையரங்குக்கு முன்னால் உள்ள தொல்பொருள் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடத்தில் 4 அடி உயரமான புத்தர் சிலை தாய்லாந்திலிருந்து வரும் பிக்குகளால் வைக்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசியப் பேரவையால் நேற்றுக் காலை போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் ஆகியோர் தலைமையில் நேற்றுக் காலையிலிருந்து சிலை வைக்கத் திட்டமிடப்பட்டுள்ள இடத்துக்கு முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. பொலிஸார், புலனாய்வாளர்கள் ஊடாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டபோதும் போராட்டக்காரர்கள் கலையவில்லை. அங்கேயே கூடாரம் அமைத்து தங்கி நின்று போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்த நிலையில் திருகோணமலை மாவட்டச் செயலர் அங்கு சென்று 'புத்தர் சிலை வைக்கப்படாது. கலைந்து செல்லுங்கள்.' என்று போராட்டக்காரர்களிடம் கேட்டுள்ளார். 'வாய்மொழிமூல உத்தரவை நம்பமுடியாது. எழுத்தில் தரவேண்டும்' என்று போராட்டக்காரர்கள் கோரப்பட்டபோது அதனை மாவட்டச் செயலர் வழங்கவில்லை. இதேவேளை - பல தரப்புக்கள் ஊடாகவும் போராட்டக்காரர்களை அங்கிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கை நேற்று இரவுவரையில் மேற்கொள்ளப்பட்டது. ஆனாலும் அவர்கள் அங்கிருந்து அகலாமல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

(அ-ஓ.5)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 | 13 |
| 04 | 05 |
| 1940 | 2021 |

### அமரர் திரு. முருகேசு அமரலிங்கம்

திதி : 02-05-2023

பிறப்பவர் எல்லாம் இறப்பவர்
எனினும் சிறப்புயர்வுற்றோர் – என்றும்
சிந்தையில் இருப்பர்

அன்னாரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 | 13 |
| 11 | 05 |
| 1946 | 2023 |

### ஜெ.கமலாதேவி

**(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகஸ்தர், யாழ். போதனா வைத்தியசாலை)**

V.H. லேன் இருபாலை, கோப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெ.கமலாதேவி அவர்கள் நேற்று (2023.05.13) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், கௌசலாதேவி, கருணாதேவி, அமரர் நகுலேந்திரராஜா (சிவம்), யோகேந்திரராஜா, புவனேந்திரராஜா, பவானி, காமினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2023) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செக்கடி இந்து மயானத்திற்கு நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**V.H. லேன், இருபாலை, கோப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 24866) A-1

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 | 13 |
| 01 | 05 |
| 1987 | 2023 |

### ஜெயசீலன் ரூபன்

சங்கரத்தையை பிறப்பிடமாகவும், பழைய தபாற்கந்தோர் வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயசீலன் ரூபன் அவர்கள் நேற்று (13.05.2023) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற ஜெயசீலன் மற்றும் கமலாதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிஜயா செல்லம்மா, செல்லத்துரை மற்றும் ஜெயலக்சுமி ஆகியோரின் பாசமிகு பேரனும், ஜெகன், காஞ்சனா, கல்பனா, துவாரகா, துசாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுனித்தா, சேகர், சிந்துஜன், கயகீசன், கம்சிகா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், பவிசாவின் அன்புச் சித்தப்பாவும், சாரு, சிந்துஜா, சிபிராஜ், கயநிதி, திவிஜன், சரோன், கேஷான் ஆகியோரின் அன்பு மாமனாரும், இனியனின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**Tel: 077 503 5611**

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி பவளராசா

கடையிற் சுவாமி கோவிலடியை பிறப்பிடமாகவும் தச்சந்தோப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பவளராசா கடந்த (12.05.2023) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி நாகம்மா தம்பதியரின் புதல்வரும், மல்லிகாதேவியின் அன்புக் கணவரும், சுப்பிரமணியம், கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தயானி, பாஸ்கரன், தனுஜா, விதுர்சா, நதீஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.05.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிணமுருங்கை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: மகன்மார்**
**பாஸ்கரன் - 076 279 5561**
**நதீஸ் - 077 0414 231**
**குடும்பத்தினர்.**

(CS 24860) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீரென தீப்பற்றிய மோ.சைக்கிள்; தெய்வாதீனமாக தப்பிய குடும்பம்!

வவுனியா, மே 14

வவுனியா நகர மத்தியில் நேற்றுமாலை 6 மணியளவில் மோட்டார் சைக்கிளொன்று திடீரெனத் தீப்பற்றியெரிந்தது. தெய்வாதீனமாக அதில் பயணித்தவர்கள் உயிர் தப்பினர்.

ஏ-9 வீதியூடாகப் பயணித்துக்கொண்டிருந்த 'ரி.வி.எஸ். சாம்' ரக மோட்டார் சைக்கிள் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அண்மித்த பகுதியில் திடீரெனத் தீப்பற்றியெரிந்துள்ளது. அதில் பயணித்த கணவன், மனைவி, பிள்ளைகளுக்கு எவ்வித உயிராபத்துக்களும் தெய்வாதீனமாக ஏற்படவில்லை. மோட்டார் சைக்கிளில் பற்றிய தீ பொதுமக்களால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. (அ-ஓ.18.110)



## உருக்குலைந்த சடலம் அல்லைப்பிட்டியில் மீட்பு!

அல்லைப்பிட்டியில் உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

காற்றுடன் கூடிய கடல் கொந்தளிப்பான காலநிலை காணப்படுகின்றது. இந் நிலையில் மீனவர் சடலம் கரை ஒதுங்கியுள்ளமை தொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். (அ-ஓ,23)

### வீடு விற்பனைக்கு

தெகிவளையில் உறுதியுடன் 1300 Sqft 3 Bedroom Apartment காலி வீதிக்கு அருகாமையில் உடனடி விற்பனைக்கு.

076 058 9822

(cs 93109)(N-1)

### வீடு விற்பனைக்கு

காளி கோவிலடி, கோண்டாவில் மேற்கில் 02 பரப்புக் காணியில் அமைந்துள்ள 03 அறை, குசினி, கோல் விஸ்தீரணம் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

077 072 9638

(cs 248559)(N-1)

### A/C விற்பனைக்கு

LG வீட்டு A/C விற்பனைக்கு

077 179 2577

(CS 248620)A-1

### வாடகைக்கு உண்டு

யாழ். சுண்டுக்குழியில் சகல தளபாட வசதிகளுடன் தேநீர் கடை வாடகைக்கு உள்ளது. அத்துடன் அறைகளும் வாடகைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு: 0777 2424 27, 0777 4127 13

(CS 248513)A-1

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ 43 வயது எழுத்து எழுதி விவாகரத்து பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு: 077 90 58 615 (வைபர் & வாட்ஸ்ஆப்)

(CS 248511)A-1

### வீடு விற்பனைக்குண்டு வத்தளை

**ஹெந்தலை வீதி**

நீர்கொழும்பு பிரதான வீதிக்கு மிக அருகாமையில் ஹெந்தலை வீதியில் 47 பேர்ச் வர்த்தக காணி பெரிய வீட்டுடன் விற்பனைக்குண்டு. ஹோட்டல், தனியார் விடுதி மேலும் பல வியாபார தேவைக்கு உகந்த வர்தக பாதையில் அமைந்துள்ளது.

**பலகல்ல வீதி**

வத்தளை எலகந்தை சந்திக்கு மிக அருகாமையில் பலகல்ல வீதி ஆரம்பிக்கும் இடத்தில் 22 பேர்ச் சதுரகாணி சிறிய வீட்டுடன் விற்பனைக்குண்டு

NO BROKERS

தொடர்பு

K.பத்மநாதன் 0777 317 838

### CEYLON TAMIL MARRIAGE BUREAU SINGAPORE

We have prospective brides and bridegrooms seeking suitable partners worldwide. Those who are interested, please contact:

Tel: +65 97539583
Email:ctmbsg@gmail.com
Strictly Confidential
Business UEN No:53406709C

(cs 50407)(N-1)

### சேலை விற்பனைக்கு..!

கொழும்பு கொட்டாஞ்சேனையில் பெண்களால் பெண்களுக்கென்றே தனித்துவமாக தேர்வு செய்யப்பட்ட காஞ்சிபுரம் கூறை சேலைகள், கல்யாண பட்டுகள், காஞ்சிபுரம் கைத்தறி Cotton Sareeகளை ஒரே இடத்தில் அமைதியாக தேர்வுசெய்யலாம். உங்கள் வரவும், தேர்வும் எமக்கு ஊக்கமளித்து நம்பிக்கை தரும் என்பதில் ஐயமில்லை

**Katpagams Silks**

0777 94 33 18 | 0771 70 27 86 | 0770 46 33 65

Parking வசதிகள் தாராளமாக உண்டு.

### பணிநிலை வேண்டுகை

- கணினி இயக்குநர்கள் - பெண்கள்
- புத்தகம் கட்டுநர்கள் - பெண்கள்
- அலுவலக உதவியாளர்கள் - ஆண்கள்

அச்சக வேலையில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. பழக விரும்புபவர்களும் சுயவிபரத்துடன் நேரில் வரவும்.

**ஷாம்பவி பதிப்பகம்**

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கிருபா லேணர்ஸ் முன்பாக) 076033 3502

(cs 50403) (N-1

### பெயர்மாற்றம்

3ஆம் யுனிற், ஊரியான், முரசுமோட்டையில் வசிக்கும் ஞானச்சந்திரன் கமலாம்பிகை ஆகிய நான் எனது பெயரை ஞானச்சந்திரன் கனகாம்பிகை என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் ஞானச்சந்திரன் கனகாம்பிகை என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

CS/50410)AH-1 ஞானச்சந்திரன் கனகாம்பிகை

### உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

பால்மா குளிசை - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம் 15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

### தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா?➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா? ➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை

இந்த எண்ணெயைப்பாவித்து பயனடைய

CS 36443

### உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

[illegible]

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

### பதவி வெற்றிடங்கள்

- பதவி - சுத்தம் செய்பவர்கள் (ஆண் மற்றும் பெண்)
- இடம் - யாழ். போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்
- சம்பளம்- மாதம் ரூ.40,000க்கு மேல்
- EPF / ETF மற்றும் பிற நன்மைகள் கிடைக்கும்

கூடுதல் விவரங்களுக்கு தொடர்புகொள்ளவும்:

Miss.R. சிவராணி - 077 850 7213
Mr.T. நிலுக்சன் - 077 465 2945

**EXPRESS ENVIRONMENTAL SERVICES (PVT) LTD**

### அந்தியேட்டி பிற்போடல்

16.05.2023 செவ்வாய்க்கிழமை நடைபெற இருந்த

**அமரர் இலட்சுமி வேலுப்பிள்ளை**

அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

குடும்பத்தினர்,
077 990 5276

நிரந்தர முகவரி: எழுதுமட்டுவாழ்.
வைத்திலிங்கம் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

(CR 39839)A-1

### கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி றஜீவ் லக்ஷாயினி அவர்களின் அன்புத் தந்தை

**ரட்ணம் மகேந்திரநாதன்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாதியர் நலன்புரிச் சங்கம்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(CS 248543)A-1

### 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 . 07 . 1947

உதிர்வு 21 . 04 . 1998



**அமரர் கதிரவேலு கந்தையா**

(இரத்தினம் மெக்கானிக்)

திதி: அபர பக்கம் (14.05.2023)

ஆண்டுகள் இருபத்தைந்து ஆயிடினும்
அன்பு முகம் மறக்கவில்லை என்றும்
உம் நினைவாய் இருந்தே நாம் தவிக்கின்றோம்
தூண்டா மணி விளக்காய் ஒளி வீசி பிரகாசித்தீர்!
இன்று வேண்டித் துதித்தே இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS.23512) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராமரிப்பாளர்

41 வயதுடைய ஒரு ஆண்,
சுகவீனமுற்றவர்களை தமிழ் பேசும்
இடங்களில் எங்கு வேண்டுமானாலும்
தங்கி நின்று அவர்களைப்
பராமரிப்பதற்கு கீழ்வரும்
தொலைபேசி எண்ணைத்
தொடர்புகொள்ளவும்.

(CS/50383)AH-1

**070 163 4395**

## விநியோகமுகவர்கள் தேவை

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தரம் வாய்ந்த அரசு அங்கீகாரம் பெற்ற மருந்துகளை வடமாகாணத்தில் விநியோகம் செய்வதற்கு விநியோக முகவர்கள் தேவை. (CR 39837)(k-1)

தொடர்பு : **077 755 3014**

# மரண அறிவித்தல்



## வேலாயுதம் இராணி

உடுவிலைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும், தற்போது பிரான்ஸில் வசித்தவருமாகிய வேலாயுதம் இராணி கடந்த (12.05.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்ற வேலாயுதத்தின் மனைவியும், அரியநாயகம் காலஞ்சென்றவர்களான இராசநாயகம், செல்வநாயகம், குணநாயகம் மற்றும் பிரேமசந்திரன், உதயகுமார், கமலாதேவி, சுசிலாதேவி, சுலோசனாதேவி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், பரிமளா, றஞ்சி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**26/2A, புதுவீதி,**
**கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.** (CS/50402)AH-1

**தகவல்:**
**அரியநாயகம்.**

# மரண அறிவித்தல்



தோற்றம் 17 . 08 . 1951

மறைவு 13 . 05 . 2023

## அப்புக்குட்டி குகனேஸ்வரன்

கணேஸ்வரம் அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கோவிற்புலம் தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி குகனேஸ்வரன் அவர்கள் நேற்று (13.05.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான அப்புக்குட்டி நாகம்மா தம்பதியரின் மகனும், அமரர்களான காசியர் சின்னாச்சி தம்பதியரின் மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், அருள்ராஜ், கவிதா, பகில்ராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பூபாலசிங்கம், ஸ்ரீகாந்தேஸ்வரி, இராஜேஸ்வரி, ரவிமலர், அமரர் உதயசீலன், கிருபாகரன், அமரர் சத்தியசீலன், ரவீந்திரன் ஆகியோரின் சகோதரனும், தயாநிதி, வாசுகி ஆகியோரின் மாமனாரும், நபிசன், கியூசன் ஆகியோரின் அன்புப் பேரனும், அமரர் பவளம், அமரர் மகேஸ்வரி, அமரர் இராஜேஸ்வரி, நகுலேஸ்வரி, வசந்தாதேவி, அமரர் கனகேஸ்வரி, அமரர் செல்லமுத்து, இரத்தினசிங்கம், பத்மாவதி, தமிழ்ச்செல்வி, றோமலா, இந்துமதி ஆகியோரின் மைத்துனரும், அமரர் பொன்னம்பலம், இராசா, அமரர் கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் சகலரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப 12.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.** (CS 2[illegible])

## VIJITHA RICE MILL (PVT) LTD
## Vacancy Announcement

**If you are proactive, highly motivated, results oriented and ready to embark on a challenging carrier - Come join us! (Women are encouraged to Apply)**

| POST | QUALIFICATION & EXPERIENCE | DUTIES & RESPONSIBILITIES |
|---|---|---|
| **Accountant (Fixed Term)**<br><br>**Based in Jaffna** | A degree in Accounting, Commerce or Finance or HNDA with 01 Year experience in a similar capacity<br>**OR**<br>Advanced level (AL) Education (Commerce) with 3 years' experience.<br><br>Experience of working with Accounting Software's. and Spreadsheet (specially analysis of data)<br>Experience of preparing financial report, procurement, cash flow statements & data entries. | • Manage to complete all accounts activities under supervision by the Senior Accountant & Directors.<br>• Preparing Voucher, Journal in accounting software and ensure the statement balance tally with book of accounting.<br>• Ensuring all expenses are in accordance to the approved budgets, accurate and timely accounting of the expenses and ensuring all the internal control procedures are adhered.<br>• Update daily production, purchase of goods and goods return by the customer in the software system and checked all manual documents are correct.<br>• Prepare bank reconciliation daily in the software system<br>• Handling supplier's invoice records and posting & controlling in software system<br>• Update the paddy purchase details both spreadsheet and software system and responsible for assist timely settle through the management.<br>• Keep records related fleet movement and preparing fuel consumption report daily<br>• Monitoring daily sale control accounts and tally with Debtors control accounts as well<br>• Prepare weekly and monthly financial report |

Other Skills and Requirements:
· Self-motivated and with an ability to work minimum supervision
· A team player with the ability to achieve results through cooperation and collaboration.
· Excellent organizing skills and high level of coordination skills
· Proven ability to take initiative
· Excellent communication skills and a positive attitude towards teamwork
· Ability to attend to multiple tasks and perform at times under pressure
· Ability to read and write in English and basic knowledge of Sinhala

· The appointment will be on 2 years contract Basis, with the possibility of extension
· Salary : Negotiable


Only short listed applicants will be called for interviews; Please submit your applications through E-mail to reach us on or before 25th May 2023.

E-mail : vijithaicemillthavady@gmail.com

**Human Resource Manager**
**Vijitha Rice Mill (pvt) Ltd**
**Thavady South**
**077 788 5039**

(CS/50411)AH-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 04 . 08 . 1943

மறைவு 10 . 05 . 2023

## தம்பாப்பிள்ளை மயிலுப்பிள்ளை

**(பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஓய்வுபெற்ற மின்சார பரிசோதகர்)**

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், மில்வீதி, மீசாலை கிழக்கு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பாப்பிள்ளை மயிலுப்பிள்ளை கடந்த (10.05.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சுதாகரன் (கனடா), தேவதர்சன் (லண்டன்), மகிந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயமோகனச்செல்வி, சூரியப்பிரியா, சுகந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம், சின்னத்துரை, நல்லம்மா, இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஈஸ்வரதாஸ், லோகேஸ்வரி, கமலேஸ்வரி, மனோகரன், இரஞ்சிதன், ஸ்ரீதரன், பாஸ்கரன், ஸ்ரீகாந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், இலக்கியா, ஸ்ரேயன், டேனுஜன், ஆதிரா, மித்திரா (டர்னிகா), சித்திரா (ராகவி) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, சண்முகம், யோகாநந்தன், யோகநாதன் மற்றும் குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகலனும், காலஞ்சென்ற செல்வராணி மற்றும் தவமணி, தேவகி, வத்சலா, ஸ்ரீவதனி, ஆனந்தராணி, பாலநந்தினி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மில்வீதி, மீசாலை கிழக்கு,**
**மீசாலை.** (CS/50395)AH-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 227 0149**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



திருமதி

## மனோகரன் சற்குணதேவி (குணம்)

(அப்பன் மாமி)

**தோற்றம்** 24.12.1948 **மறைவு** 12.05.2023

காரைநகர் வேம்படியைப் பிறப்பிடமாகவும், மல்லிகையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனோகரன் சற்குணதேவி கடந்த (12.05.2023) வெள்ளிக்கிழமை இரவு இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்தபிள்ளை மீனாட்சிப்பிள்ளை (மனோன்மணி) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மனோகரன் அவர்களின் ஆருயிர் மனைவியும், சிவஞானசுந்தரம் (லண்டன்), காலஞ்சென்ற இராசேந்திரம், இராசேஸ்வரி (நேசம் - வவுனியா), திருமலர்தேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கருணாகரன், கமலாகரன், மதிவதனா மற்றும் கமலாதேவி, இராசேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சிவானந்தன், தியாகராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், நாகலட்சுமி, சறோஜினிதேவி, காலஞ்சென்ற வெற்றிவேலு மற்றும் பரஞ்சோதி ஆகியோரின் அன்புச் சகலியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05. 2023) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு அவரது மல்லிகை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**மல்லிகை,**
**காரைநகர்.**

(CS 50409)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# விற்பனைக்கு

**பின்வரும் இயந்திரங்கள் மற்றும் பொருள்கள்**
**உடனடி விற்பனைக்கு**
**கீழ்வரும் பொருள்களை வவுனியாவில் பெற்றுக்கொள்ளலாம்.**

| பொருள்கள் | விலை |
|---|---|
| ▶ வீல் லோடர் (England Jcb மொடல்) | - 2,600, 000/= |
| ▶ போக்லிப்ட் (03Ton) Commetsu | - 650, 000/= |
| ▶ 40 அடி கன்ரேனர் பெட்டி | - 1,050, 000/= |
| ▶ 20 அடி கன்ரேனர் பெட்டி (ரான்ஸ்போட் உட்பட) | - 725, 000/= |
| ▶ ரியூசன் மேசை, கதிரை 30 செட் (திருத்தம் செய்யவேண்டும்) | - 45, 000/= |
| ▶ ஜக் முட்டு (பாவித்தது) 01 | - 2, 700/= |
| ▶ வாகனம் நிறுக்கும் தராசு 40Ton | - 1,400,000/= |
| ▶ Tenweel Leyland gaoo லொறி | - 3,400,000/= |

தொடர்பு: **077 959 7231**

(cs.50392) (N-1)

**விற்பனைக்கு**

கிளிநொச்சி
கரடிப்போக்குச்
சந்திக்கருகாமையில்
3 பரப்பு உறுதியுடன்
கூடிய நிலம்
விற்பனைக்குண்டு.
(தரகர்கள் வேண்டாம்)

தொடர்பு:
**077 399 1592**

# மரண அறிவித்தல்



## முருகேசு சிவகடாட்சம்

தோற்றம் 10.12.1948 மறைவு 13.05.2023

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் எழுவைதீவை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சிவகடாட்சம் நேற்று (13.05.2023) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ண பிள்ளை சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், குகலட்சுமி யின் அன்புக் கணவரும் கமலேஸ்வரனின் அன்பு தந்தையாரும், அயிலவனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (16.05.2023) செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.30 மணியளவில் தகனக்கிரி யைக்காக யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**566/1 கே.கே.எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS 50398)(k-1)

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 877 9408**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**இல்லாளை இழந்து**
**ஏங்கும் மனது!**

மலர்வு 21 . 01 . 1957



உதிர்வு 13 . 01 . 2022

## பாலசுப்பிரமணியம் செல்வராணி

"மணிப்புறா" போல் இருந்தாய்!
மனக்குறை தந்தேன் போனாய்?
தனித்திராப் பாவி உலகில்
தனித்துத்தான் போனேன் உன்னால்!
நினைத்திரா நாளும் உண்டோ?
நினைவெல்லாம் நீயே ஆனாய்.
மனத்துயர் உன்னைப் பிரிந்து
மாறமுன் மகனை இழந்தேன்!
எனக்குயிர் நீங்கள் அன்றோ.
என்மனம் தவிக்குது ஐயோ!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆண்டு ஒன்று ஆனபோதும்
ஆறவில்லையே! மனது.
உடன்கட்டை ஏறுவதை வாசித்ததுண்டு
புத்தகத்தில். நிஜத்தில் உணர்த்தியவன் நீ.
பாசத்தை வேஷம்போட்டு காட்டும்
உலகில் நீ மட்டும் விதிவிலக்கடா...
அடுத்தவரின் ஏழ்மையை தமக்கு சாதகமாக்கி
விளம்பரத்தை தேடும் குறவர் வாழும் நாடாச்சு.
உயிரற்ற உன் உடலை குரங்கு அப்பம்
பகிர்ந்த கதையாயிடுச்சு.
எவன் எவளோ உரிமை கொள்ள
நீ ஒன்றும் அநாதையல்ல.
இறந்தவர்கள் ஆண்டவனுக்கு சமன்.
இப்படி மனம் கொண்ட ஜென்மங்களின்
துரோகத்தை வாழ்ந்து கொண்டு இருப்பவர்கள்
நினைக்கின்ற அளவிற்கு
பாடமாக அமையட்டும், நடந்த உன் மரணம்...

**பிள்ளையின் பிரிவு**
**துயர் பெரிது!**

மலர்வு 22 . 04 . 1979



உதிர்வு 25 . 04 . 2022

## பாலசுப்பிரமணியம் சதீஸ்

கன்றுக் குட்டிபோல் துள்ளினை
காதலால் மனதை அள்ளினை
இன்று விட்டு நீ போயினை
எனக்கேன் இந்த ஊழ்வினை?
ஒன்று நன்றென நீ வாழ
நம்பி இருந்தோமே ஐயோ!
ஒன்றும் அறியாப் பாவிமேல்
பேரிடி விழுந்தாற் போல நீ
சென்று விட்டனை; என்ன
செய்யச் சொல்லி நீ சென்றனை?
நின்று பதறுறேன் எந்தன்
நிலையினைத் தேற்ற யார் உள்ளார்?

இல.94/4, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SLIIT UNI
THE KNOWLEDGE UNIVERSITY

NORTHERN UNI



SLIIT | NORTHERN UNI

# நாம் ஏன் யாழில்....

தற்பொழுது SLIIT இன் நான்கு வருட பட்டப்படிப்பினை யாழில் தொடரமுடியும். அதி நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய கணினி ஆய்வுகூடங்கள் மற்றும் வகுப்பறைகள்.

SLIIT மாலபே பீடாதிபதியின் நேரடித் தலைமையின்கீழ் அமைந்த தகுதி வாய்ந்த பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் குழாம்

## School of Computing

**BSc (Hons) in Information Technology Specialising in:**

- **Information Technology**
- **Data Science**
- **Software Engineering**
- **Cyber Security**
- **Interactive Media**
- **Computer Systems & Network Engineering**
- **Information System Engineering**

## School of Business

**BBA (Hons) Specialising in:**

- **Business Analytics**
- **Marketing Management**
- **Accounting & Finance**
- **Logistics & Supply Chain Management**

பட்டப்படிப்பின் பின்னரான நிச்சயமான வேலைவாய்ப்புகள் எம்மிடம் பதிவு செய்யும் மாணவர்களுக்கு

**25% அடிப்படையிலான 6 லட்சம்**

வரையிலான பெறுமதி மிக்க புலமைப்பரிசில்கள்

**க.பொ.த உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்களும் சித்தி இருந்தும் பட்டப்படிப்பினை தொடர முடியவில்லையா**
**உங்களுக்கான வேலைவாய்ப்புடன் கூடிய UGC அனுமதி பெற்ற பட்டப்படிப்பு எம்மிடம் இருந்து**

NORTHERN UNI | 0771 471 471 | www.northernuni.lk | SLIIT UNI THE KNOWLEDGE UNIVERSITY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Contact Us - NorthernUNI Enrollment Office, 5th Floor, Magicktech Building 218, 5/1 Stanely Road, Jaffna, Sri Lanka

# விரல் அடையாளப் பதிவு நாளை முதல் கட்டாயம்

கொழும்பு, மே 14

கொரோனாப் பெருந்தொற்று அபாயத்தின் காரணமாக அரச அலுவலகங்களில் இடைநிறுத்தப்பட்டிருந்த விரல் அடையாளப் பதிவு இயந்திர வரவுப் பதிவு முறையைக் கட்டாயமாகக் கடைப்பிடிக்குமாறு திணைக்களத் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அரச அலுவலகங்களின் சகல பணியாளர்களும் தமது உள்வருகை மற்றும் வெளிச் செல்கையை உறுதிப்படுத்துவதற்காக நாளை முதல் விரலடையாளப் பதிவு இயந்திரங்களைப் பயன்படுத்தவேண்டும் என்று பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது. (அ-ஒ.இ)



மீசாலை வடக்கு வேம்பிராய் கான் றைச்சாட்டி ஆலாக் கிரக பூதவரத விநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் கொடியேற்றத் திருவிழா கடந்த மாதம் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ய)



சாவகச்சேரி - கோயிற் குடியிருப்பு சித்திவிநாயகர் கலைமன்றத்தினரின் ஆண்டு விழாவில் பளுதூக்கல் போட்டியில் சாதனை படைத்த சாவகச்சேரியைச் சேர்ந்த கு. புசாந்தன் கௌரவிக்கப்பட்டார். (ய-9)

# குறுக்கே பாய்ந்தது நாய்; இளைஞன் உயிரிழப்பு


வவுனியா, மே 14

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளான்.



வவுனியா - வேப்பங்குளத்தில் இடம்பெற்ற இந்த விபத்தில் மகாறம்பைக்குளத்தைச் சேர்ந்த டனுஜன் (வயது - 20) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நெளுக்குளத்திலிருந்து வவுனியா நகரை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் வேப்பங்குளத்தில் வீதியின் குறுக்கே பாய்ந்த நாயுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞனே உயிரிழந்துள்ளார். (அ-ஒ,110)



நல்லைக் கலாமந்திர் நாட்டியப் பள்ளி இயக்குநர் அனுசாந்தி சுகிர்தராஜின் மாணவி யாழினி வைபோகராஜாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தலைமையில் இடம்பெற்றது. (ச-66)



நீர்வேலி கந்தசுவாமி ஆலய தீர்த்தோற்சவத் திருவிழா சித்திராப்பௌர்ணமி தினத்தன்று சிறப்புற இடம்பெற்றது. (ச-17)







நீர்வேலி தெற்கு ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலையம், நீர்வேலியில் அமைந்துள்ள பாடசாலைகளில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்துள்ளது. நீர்வேலி கந்தசுவாமி தீர்த்தத் திருவிழாவன்று நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறுப்பிட்டி சந்நியதாஸ் குழுவினரின் வில்லிசை நிகழ்வும் இடம்பெற்றது. (ச-17)



முல்லைத்தீவு - கொக்கிளாய் அ.த.க.பாடசாலை மாணவர்களுக்கு புலம்பெயர்ந்து சுவிற்ஸர்லாந்தில் வசிக்கும் கேதீஸ்வரன் ரோகினி தம்பதியரின் புதல்வி சைந்தவியின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஸ்ரீ சீரடி சாயி பாபா ஆலய சுவிற்ஸர்லாந்து நிர்வாகத்தினரால் கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-246)



வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலையின் ஜயாத்துரை மண்டபத்தில் கடந்த 10ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் கல்வி, விளையாட்டுத்துறை உட்படப் பல்வேறு துறைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு வெற்றிக்கிண்ணங்களும், வெற்றிப்பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ய-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாப்பாட்டுப்...

கப்பட்ட பேரணி, விகாரையில் மதியச் சாப்பாடு வழங்கலுடன் முடிவுற்றது.
தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு ஆதரவு தெரிவித்து அனைத்து மதங்களையும் ஒன்றாக மதிக்கவேண்டும் என்ற தொனிப்பொருளில் பேரணி தையிட்டி சந்தியிலிருந்து விகாரை வரை முன்னெடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பூசை வழிபாடுகள் இடம்பெற்று மக்களுக்கு மதியச் சாப்பாடு வழங்கப்பட்டது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டவரும், அரச ஆதரவுப் போராட்டங்களை மேற்கொண்டுவருபவருமான அருண் சித்தார்த், 1959 விகாரை என்று அடையாளப்படுத்திய பகுதியிலேயே திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.
இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது காணிகளில் சட்டவிரோதமாக மேற்படி விகாரை அமைக்கப்பட்டுள்ளதாக அந்தக் காணிகளின் உரிமையாளர்கள் கடந்த வாரம் போராட்டம் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.
(அ-ஒ.26)





## சதிப்புரட்சியின்...

பொலிஸார், முப்படையினர், விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸ் கலகமடக்கும் பிரிவினரை உள்ளடக்கிய வகையில் விசேட கூட்டுப் பாதுகாப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அத்துடன், குருநாகலை உட்பட நாட்டில் ஏனைய சில இடங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.
கொழும்பு பல்கலைக்கழகத்தை மையப்படுத்தி, அரசுக்கு கடும் அழுத்தம் பிரயோகிக்கும் வகையில் இரகசிய நடவடிக்கை இடம்பெறுவதாகப் புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் கிட்டியுள்ளது.
இதனையடுத்து கொழும்பு பல்கலைக்கழகம், சுதந்திர சதுக்கம், அலரிமாளிகை வளாகம் உட்பட மேலும் சில இடங்களில் நேற்றுமுன்தினம் இரவு முதல் வீதிச் சோதனைச் சாவடி உட்பட விசேட பாதுகாப்பு நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டது.
புலனாய்வுப் பிரிவிடம் இருந்து மீளத் தகவல் கிடைக்கப்பெறும்வரை இந்தப் பாதுகாப்புத் திட்டம் நடைமுறையில் இருக்கும் எனக் கூறப்படுகின்றது.
அதேவேளை, கொழும்பில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டதையடுத்து அது தொடர்பில் சமூகவலைத்தளங்களில் பல கோணங்களில் தகவல்கள் பரவின. மஹிந்தவை பிரதமராக்கவே - சதியின் ஊடாக ஆட்சியைக் கைப்பற்றவே - இந்தப் பாதுகாப்பு ஏற்பாடு என்ற தகவலும் இதில் உள்ளடங்கியிருந்தது.
(அ-ஒ.44)

## ஆலய...

யாகக் குடைச்சல் கொடுக்கும் செயற்பாட்டை நெடுங்கேணி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.
பௌத்த - சிங்கள கடும்போக்குவாதியான நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர வெடுக்குநாறிமலை ஆலயத்துக்குச் சென்று வந்தபின்னர் நெடுங்கேணிப் பொலிஸார் இந்தக் குடைச்சலை தீவிரப்படுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
ஆலயப் பூசகர் நெடுங்கேணி பொலிஸாரால் நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டு 2019ஆம் ஆண்டு ஏணிப்படி வைத்தது யார்? நிதி வழங்கியது யார்? இதனோடு தொடர்புடையவர்கள் யார்? என்ற பல கேள்விகளோடு மூன்று மணி நேரத்துக்கு மேலாக அவரை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். நேற்று மாலை ஆலய பூசகரின் மனைவியிடம் ஒரு மணிநேரம் விசாரணை செய்துள்ளார்கள். 2019ஆம் ஆண்டு வீட்டுக்கு ஏணிப்படி கொண்டுவந்தது யார்? வீட்டிலிருந்து ஆலயத்துக்கு கொண்டு சென்றது யார்? போன்ற பல விடயங்கள் தொடர்பாக விசாரணை செய்யப்பட்டுள்ளது.
இன்று காலை ஆலய பரிபாலன சபையின் போஷகர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். அதனைத்தொடர்ந்து இன்று மதியம், மாலை ஏனைய பரிபாலன சபை உறுப்பினர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.
அதேவேளை நேற்று மதியம் சிவபூமி அறக்கட்டளையின் ஆறு.திருமுருகனிடம் நெடுங்கேணி பொலிஸார், ஆலயத்துக்கு புதிதாக வழங்கிய விக்கிரகங்கள் தொடர்பாக இரண்டு மணிநேரம் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.
இதேவேளை- வெடுக்குநாறிமலை ஆலயத்தில் விக்கிரகங்கள் உடைத்தெறியப்பட்டமை தொடர்பில் சந்தேகநபர்கள் இதுவரை கைது செய்யப்படாதுடன் அவர்களைக் கைது செய்யுமாறு நீதிமன்றம் பலமுறை கூறியும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.
(அ-ஒ.5)

## சூட்டுக்...

டன் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.
நீலிமோட்டையைச் சேர்ந்த நியூட்டன் தர்சினி (வயது - 26), சிவபாலன் சுயாந்தன் (வயது -24) ஆகிய இருவருமே நேற்றுக்காலை இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.
நீலியாமோட்டையில் உயிரிழந்த பெண்ணின் கணவர் குளத்தில் மீன்பிடிக்கச் சென்று நேற்று அதிகாலை வீட்டுக்குத் திரும்பியுள்ளார். அப்போது வீட்டின் அறையில் உறங்கிக்கொண்டிருந்த தனது மனைவி குருதி வெள்ளத்தில் இறந்து கிடந்தமை கண்டு அதிர்ச்சியடைந்தார். உயிரிழந்திருந்த பெண்ணின் அருகில், அவரது ஒன்றரை வயதுக் குழந்தையும் இருந்துள்ளது. அதேநேரம் கணவரின் உறவினர் ஒருவரும் வீட்டில் இருந்துள்ளார். சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.
பொலிஸார் சந்தேகத்தில் இளைஞன் ஒருவனைக் கைது செய்வதற்காகத் தேடினர். அப்போது அந்த இளைஞன் உயிரிழந்த பெண்ணின் வீட்டுக்கு அருகிலுள்ள ஆலயத்துக்கு முன்பாக சூட்டுக் காயங்களுடன் சடலமாகக் காணப்பட்டுள்ளான். அவனது சடலத்துக்கு அருகில் இடியன் துப்பாக்கியும் மீட்கப்பட்டுள்ளது.
உயிரிழந்த பெண் தனது கணவருடன் யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தார். பின்னர் தனது உறவினரின் வீட்டில் சில காலம் வசித்துவிட்டு, சில தினங்களுக்கு முன்னரே தற்போதைய வீட்டில் வசிக்கத் தொடங்கியிருந்தார் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
உயிரிழந்த இளைஞன், கொலையுண்ட பெண்ணின் வீட்டுக்கு மூன்று தினங்களுக்கு முன்னர் வந்து தகராறு செய்தார் என்றும் பொலிஸார் விசாரணைகளில் கண்டறிந்துள்ளனர்.
(அ-ஒ.110)

## சிறுமியைக்...

துள்ளனர். நேற்றுக் காலை 7 மணியளவில் கைவேலிப்பகுதியில் 10 வயது மாணவியை தனியார் வகுப்புக்காக தாயார் மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்று இறக்கியுள்ளார். இதன்போது வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர்கள் சிறுமியை இழுத்து மோட்டார் சைக்கிளில் ஏற்றி முகத்தைத் துணியால் மூடிப்பிடித்துள்ளனர். சிறுமி மயங்கியுள்ளார். இந்தச் சம்பவத்தைக் கண்ட பொதுமக்கள் மோட்டார் சைக்கிளை கலைத்துப்பிடித்துள்ளனர்.
கோம்பாவிலைச் சேர்ந்த 23 வயது இளைஞன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளான்.
பாதிக்கப்பட்ட சிறுமி முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு மருத்துவ பரிசோதனைக்காகக் கொண்டுசென்று அங்கு சட்டமருத்துவ அதிகாரியின் மருத்துவப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு மருத்துவமனையில் தங்க வைக்கப்பட்டுள்ளார்.
தாயாருடன் தனித்து சிறுமி வாழ்ந்து வரும் நிலையில் இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.
இதேவேளை - வடக்கு மாகாணத்தில் கடந்த ஒரு வாரத்தினுள் சிறுவர் கடத்தல் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
(அ-ஒ.5.18)

## சதியால்...

ரைத்துள்ளார்.
சதி முயற்சி தொடர்பான உளவுத் தகவல் கிடைத்ததையடுத்து கொழும்பில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் கொழும்புச் செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கே ஜனாதிபதி ரணில் மேற்கண்டவாறு பதிலளித்தார்.
'பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் மக்கள் அச்சமடையத்தேவையில்லை. உளவுத் தகவல்களுக்கு அமைவாக அவை மேற்கொள்ளப்பட்டுள்ளன. சதி நடவடிக்கை ஊடாக ஆட்சியைக் கவிழ்க்க முயன்றால் அது நிச்சயமாகத் தோல்வியில்தான் முடியும்' என்று ரணில் குறிப்பிட்டார்.
(அ-ஒ.22)

## கிழக்கில்...

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்றிட்டம் கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீட மாணவர் ஒன்றியத்துடன் இணைந்து மட்டக்களப்பின் பல்வேறு பகுதிகளிலும் நேற்றுப் பெரும் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.
கிழக்குப் பல்கலைக்கழக முன்றிலில் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களுடன் இணைந்து மட்டக்களப்பு வந்தாறுமூலை பகுதியிலுள்ள வீடுகளுக்கு நேற்றுக் காலை 8 மணிக்குச் சென்று மட்டக்களப்பின் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்படவுள்ள முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிப்புக்கான அரிசி, விறகு உள்ளிட்ட பொருள்கள் இரு பல்கலைக்கழகங்களினதும் மாணவ மாணவியரால் திரட்டப்பட்டது. மக்கள் இதன்போது முன்வந்து அவற்றைப் பெருமளவு வழங்கி வைத்துள்ளனர்.
வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழக முன்றில், மட்டக்களப்பு, செங்கலடி, மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் வளாகம், மட்டக்களப்பு ஆரையம்பதி ஆகிய பிரதேசங்களில் முள்ளிவாய்க்கால் கஞ்சி மற்றும் வலி சுமந்த முள்ளிவாய்க்கால் அவலம் மற்றும் முள்ளிவாய்க்கால் கஞ்சி தொடர்பான துண்டறிக்கையும் விநியோகிக்கப்பட்டன.
இந்த நிகழ்வுகளில் பெருமளவு பல்கலைக்கழக மாணவிகளும் இணைந்திருந்தனர்.
(அ-ஒ.125)

## சிமெந்து...

நேற்று நள்ளிரவிலிருந்து குறைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் புதிய விலை 2 ஆயிரத்து 600 ரூபா என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
(அ-ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனி, மா விலை அதிகரிக்கப்படாது

## அமைச்சர் அறிவிப்பு

சீனி மற்றும் கோதுமை மா என்பனவற்றின் விலை அதிகரிக்கப்படமாட்டாது என நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அத்தியாவசிய உணவுப்பொருள் இறக்குமதியாளர் சங்கங்களுடன், அமைச்சர் கலந்துரையாடல் நடத்தினார். இதன்போதே விலை அதிகரிப்பை மேற்கொள்ளாமலிருக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதியாளர்களிடம் காணப்படும் சீனி கையிருப்பு தொடர்பில் ஆராயுமாறு நுகர்வோர் விவகார அதிகாரசபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். அத்துடன், இந்தச் சந்தர்ப்பத்தில் விலை அதிகரிப்பை மேற்கொள்ளாதிருக்குமாறு தாம் விடுத்த கோரிக்கையை இறக்குமதியாளர்கள் ஏற்றுக் கொண்டதற்கமைய, அடுத்த ஒரு மாதத்துக்கு சீனி விலை அதிகரிப்பு தொடர்பான சிக்கல் ஏற்படாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கோதுமை மா ஒரு கிலோகிராம் 195 ரூபாவைவிட அதிகரிக்காதிருக்கவும் சங்கங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன. உலக சந்தையில் கோதுமை மாவின் விலை குறைவடைந்துள்ளது. எனவே வரி அதிகரிக்கப்பட்டாலும் கோதுமை மாவின் வில்லையை அதிகரிக்காதிருக்குமாறு அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். (அ-ஒ,இ)


### வீடு, காணி விற்பனைக்கு

நல்லூர் சூழலில் இரண்டு வீடுகளுடன் கூடிய 3 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு இல: 077 0299 953
070 6873 133

### காணி விற்பனைக்கு

கோப்பாய் சரவணபவ School இற்கு அண்மையில் 2 பரப்பும் கல்வியங்காடு 3ஆம் கட்டை லேனில் 4 1/2 பரப்பும் விற்பனைக்கு.

077 60 111 35

### பணிப்பெண் தேவை

சமையல் தெரிந்த வீட்டுப் பணிப்பெண் தேவை.

077 719 5483

### காணி விற்பனைக்கு

கச்சேரியடியில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. 4 பக்க சுற்று மதில், கிணறு உண்டு. A9 றோட்டில் இருந்து 50m தூரம்.

தொடர்பு: 077 358 2704

### வாடகைக்கு

கல்வியன்காடு 3ஆம் கட்டை பருத்தித்துறை வீதியோரமாக கடை வாடகைக்குண்டு.

077 175 0746

### காணி விற்பனைக்கு

இயக்கச்சியில் 80 பரப்புத் தென்னந்தோட்டம் (Reecha Farm அருகில்) விற்பனைக்குண்டு.

076 200 9025

### கழிவகற்றும் பவுசர் தேவை

கழிவகற்றும் (Gully Bowser) பவுசர் டிரக்ரருடன் புதியதோ, பாவித்ததோ விலைக்குத் தேவை.

077 606 2350

### சாரதி தேவை

தனியார் நிறுவனத்தின் உயர் அதிகாரிக்கு அனுபவம் உள்ள சாரதி (Driver) தேவை.



- வெளிமாவட்டத்திலிருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதி செய்து தரப்படும்.
- சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 120 9998

### வீடு வாடகைக்குத் தேவை

கோப்பாய் Teaching Training College இற்கு அண்மையாக வீடு வாடகைக்குத் தேவை.

077 557 4325

### மணமகன் தேவை

1997 ஆம் ஆண்டு உத்தர நட்சத்திரம், கணினிப் பொறியியலாளராக பணிபுரியும் மணமகளிற்கு மணமகன் தேவை.

077 755 2489, 011 250 1021

### காணி விற்பனைக்கு

- யாழ்ப்பாணம் கீரிமலையில் 84 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.
- கீரிமலையிலிருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
- கீரிமலை சிவன் கோயில் (நகுலேஸ்வரர்) இருந்து 1 KM தூரம்.
- திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள், சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம்.
- காணியின் வடக்கு எல்லை கடல், தெற்கு எல்லை பிரதான காபற் வீதி முகப்பு (மாதகல் - கீரிமலை).
- ஒரு பரப்பின் விலை - பத்து இலட்சம் ரூபாய். (1000000/=)



தொடர்பு: 076 911 9371
076 7390 413
077 8748 135

### வேலைவாய்ப்பு

நெல்லியடியில் இயங்கும் FANCY SHOP ஒன்றில் பணிபுரிய வேலையாள்கள் தேவை.
மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்ளவும்.

077 725 1036

### வாடகைக்கு

கந்தர்மடம் அரசடி வீதியில் உள்ள வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. சைவபோசனம் விரும்பத்தக்கது.
(பெண் பிள்ளைகளுக்கு மட்டும்)

077 586 1147

### பணிப்பெண் தேவை

யாழ்நகரில் உள்ள 05 பேரைக்கொண்ட குடும்பம் ஒன்றிற்கு சமையல் வேலைக்கு ஒருவரும், 03 வயது, 05 வயது குழந்தைகளைப் பராமரிப்பதற்கு ஒருவரும் தங்கிநிற்க கூடியவர்கள் தேவை. வயது - 45 - 60 வரை
சம்பளம் - 40,000 (ஒருவருக்கு)

தொடர்பு:
077 937 0000, 075 988 1000

### Vacancy
உடனடி வேலைவாய்ப்பு
IMS Institute of Medical Sciences

- வரவேற்பாளர் (Receptionist)
- சுத்திகரிப்பாளர் (Cleaner)

சம்பளம் நேரில் தீர்மானிக்கப்படும்

Green Memorial Hospital, Manipay
☎ - 0212256990
- 0760477106

### காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாயில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

(CS24384)(J-1) 070 701 3060

### வீடு / காணி விற்பனைக்கு

- 2ஆம் குறுக்குத்தெருவில் காணி விற்பனைக்கு.
- பலாலி வீதியோரமாக விடுதிக் கட்டடம் விற்பனைக்கு.
- மீசாலை வேம்பிராயில் வீடு விற்பனைக்கு.
- மட்டுவிலில் காணி விற்பனைக்கு.

Vijenthan Kunaradnam - +94 77 227 6173

### கணினி தட்டெழுத்தாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு கணினி தட்டெழுத்தாளர் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

076 573 4507

### ஆங்கில வகுப்புகள்

UKVI / IELTS (General Academic) மற்றும் தரம் 6 - 11 வரையான ஆங்கில வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தட்டாதெரு சந்தி, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு 077 738 3060

### வேலைவாய்ப்பு (பெண்)

எமது நிறுவனத்தில் பொருட்கள் பொதி செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. நாளொன்றுக்கு 850ரூபா சம்பளமும், மதிய உணவும் வழங்கப்படும். சுயவிபரக்கோவையுடன் கிழமை நாளகளில் நேரில் வரவும். (9am - 4pm)

சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2567
(சத்திரத்துச் சந்திக்கு அருகாமையில்)

### நீர்க்கசிவைத் தடுப்பதற்கு

உங்கள் கட்டடங்கள் மற்றும் புதிதாகக் கட்டப்படும் கட்டடங்களில் ஏற்படும் நீர்க்கசிவைத் தடுப்பதற்கு உலக தரம் வாய்ந்த இரசாயனப் பொருட்களைக் கொண்டு 10 வருட உத்தரவாதத்துடன் சீர் செய்து தருவோம். (நிறுவனத்தின் உத்தரவாதத்தை ஆராய்ந்து பார்க்கவும்)
போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
FINEX
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com

### 2022 O/L மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்கு

வரலாறு
ஆசிரியர் RS. சந்திரன்

காலம் மே 20, 21 சனி, ஞாயிற்றுக்கிழமை
(காலை 8.00 மணி முதல் 1.00 வரை)

குறிப்புகள்:
- ஆர்வமுள்ள வெளிமாணவர்கள் கலந்து கொள்ள முடியும்.
- எதிர்பார்க்கை வினாக்களும் பாடக்குறிப்புக்களும் வழங்கப்படும்
- இலங்கைப்படம், உலகப்படம் இலகுவான முறையின் அடிப்படையில் குறித்துக் காட்டப்படும்
- கட்டணத்தைச் செலுத்தி கருத்தரங்கில் பங்குபற்ற முடியும்.

றோயல் அக்கடமி
அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0776649134
நிர்வாகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible] : 021 493 0000 - [illegible] : 021-493 1111
[illegible] @uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள் :08

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 சித்திரை 31 ஞாயிற்றுக்கிழமை (14.05. 2023) சிகரம் : 146

"ஊர் பிரிந்தோம்
ஏதும் எடுக்கவில்லை
அகப்பட்ட கொஞ்சம் அரிசி,
பருப்பு, இரண்டு பாய், இருமல் மருந்து,
மனைவியின் மாற்றுடுப்பு மூன்று,
காற்றுப் போய்க்கிடந்த மிதிவண்டி,
காணியுறுதி,
அடையாள அட்டை அவ்வளவே,
புறப்பட்டு விட்டோம்.
இப்போ உணருகிறேன்
உலகில் தாளாத துயரெது?
ஊரிழந்து போதல் தான்."

- புதுவை இரத்தினதுரை

# காணியை விழுங்கும் பூதங்கள்

## வவுனியா நகர அபிவிருத்தி கானல்நீரா?





பா.குமுதன்

வவுனியா - யாழ். வீதியில் அமைந்துள்ள 65 ஏக்கர் பரப்பளவிலான விவசாயத்திணைக்களத்தின் காணியினை , நகர அபிவிருத்தி உட்பட ஏனைய தேவைகளுக்காகப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை அரச நிர்வாகத்தால் முன்னெடுக்கப் பட்டு வருகின்றது. அதற்கு விவசாயிகள் மத்தியில் இருந்து எதிர்ப்புக்களும் வெளிப்படத்தொடங்கியுள்ளன. ஏற்கனவே மாவட்டத்தின் அபிவிருத்திச்செயற்பாடுகளில் போதியதிட்டமிடல் இல்லாமல் எதேச்சதிகாரப்போக்கில் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் பயனற்றுப்போனநிலையில் நீண்டகாலமாக பாதுகாக்கப்பட்டுவந்த விவசாயநிலமும் பாழாகிப்போய்விடுமோ என்ற அச்சம் மக்கள்மத்தியில் ஏற்பட்டுள்ளது.

வவுனியா வழியாக வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்குப் பயணிப்போர், இந்த விவசாயக் காணியைத் தரிசிக்காமல் சென்றிருக்கமுடியாது. மாகாண விவசாய அமைச்சின் அதிகாரத்தின் கீழ் குறித்தகாணி தற்போது பராமரிக்கப்பட்டுவருகின்றது. விதைஉற்பத்தி, நாற்றுமேடை அமைப்பு, பால் உற்பத்தி போன்ற செயற்பாடுகள் குறித்த காணியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஒருங்கே நெல், தானியங்கள் தரம்பிரிக்கப்படும் இயந்திரக்கட்டுமானமும் இங்கு செயற்பட்டுவருகின்றது.

### மத்தியிடம் கையளித்த ஆளுநர்

கடந்த ஆண்டு வவுனியாவுக்கு விஜயம்செய்த ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவிடம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் கு.திலீபன் கோரிக்கை ஒன்றினை முன்வைத்திருந்தார். நகரஅபிவிருத்திக்கு இடவசதி இல்லாமையால் மாகாண விவசாயத் திணைக்களத்துக்குச் சொந்தமான 65 ஏக்கர் காணியினை விடுவித்துத் தரவேண்டும் என்பதே அந்தக் கோரிக்கை. அதற்குப் பச்சைக்கொடிகாட்டினார் ஜனாதிபதி.

அவரது உத்தரவுடன் காணியினை விடுவித்த வடமாகாண ஆளுநர் வவுனியா பிரதேசசெயலாளரைப் பொறுப்பேற்குமாறு உத்தரவுக்கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். குறித்த காணிக்கு மாற்றீடாக ஓமந்தைப் பகுதியில் 100 ஏக்கர்காணியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டிருந்தது. குறித்த கடிதத்தில் மாவட்டஒருங்கிணைப்புக் குழுவின் வேண்டுகோளுக்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்ற விடயத்தினை அவர் குறிப்பிடத்தவறவில்லை. ஆளுநரது உத்தரவுக்கடிதம் கிடைத்த பின்னரே இவ்வாறான ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை தொடர்பாக மாவட்ட விவசாய அமைப்புக்களுக்கும் மக்களுக்கும் தெரியவந்தது. அதன் பின்னரே அது சர்ச்சையாகிப் போனது.

### போதிய வருமானமில்லை

குறித்தகாணியின் மூலம் போதியவருமானம் கிடைக்கவில்லை. அதில் பல பகுதிகள் பயன்பாடற்றே இருக்கின்றன. அதனை ஏனைய தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளமுடியும். இதுவே அரசதரப்பின் நியாயப்பாடு. அத்துடன் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் அரசகாணிகள் இருக்கின்றன. அங்கு விவசாயச்செயற்பாடுகளை முன்னெடுக்கலாம். நகரத்துக்கு அண்மையில்தான் அதனைச் செய்யவேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்பது அவர்களது நிலைப்பாடு. இது தொடர்பில் அண்மையில் இடம்பெற்ற வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த அபிவிருத்திக் குழுவின் தலைவர் கு.திலீபன் 'இந்தக் காணியால் இதுவரை வவுனியாவுக்கு என்ன இலாபம் கிடைத்தது? 28 லட்சம் ரூபாவே வருமானமாகக் கிடைக்கின்றது. எனவே பயனற்ற இடங்களை அரச திணைக்களங்களுக்கு கையளித்து. பயனுள்ளவகையில் செயற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்' என்று தெரிவித்திருந்தார்.

> “ வவுனியா வழியாக வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்குப் பயணிப்போர், இந்த விவசாயக் காணியைத் தரிசிக்காமல் சென்றிருக்கமுடியாது. மாகாண விவசாய அமைச்சின் அதிகாரத்தின் கீழ் குறித்தகாணி தற்போது பராமரிக்கப்பட்டு வருகின்றது. விதைஉற்பத்தி, நாற்றுமேடை அமைப்பு, பால் உற்பத்தி போன்ற செயற்பாடுகள் குறித்த காணியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஒருங்கே நெல், தானியங்கள் தரம்பிரிக்கப்படும் இயந்திரக் கட்டுமானமும் இங்கு செயற்பட்டுவருகின்றது.

### எதிர்ப்பைக் காட்டும் விவசாய அமைப்பு

அபிவிருத்திச்செயற்பாடுகளுக்காக விவசாயக்காணியினை விடுவிப்பதற்கு விவசாயிகள், எதிர்ப்பினை வெளியிட்டுள்ளனர். இது தொடர்பில் தமது நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ள மாவட்ட விவசாயச் சம்மேளனத்தினர், 'வருமானம் வரவில்லை என்பதற்காக விவசாயக்காணியினை விடுவிப்பதை ஏற்கமுடியாது. நாட்டில் எத்தனையோ வருமானம் குறைவான காணிளும் திணைக்களங்களும் அரசிடம் இருக்கின்றன. அவற்றை வேறுதேவைகளுக்காகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இங்குமட்டும் ஏன் இவ்வளவு அவசரப்படுகின்றார்கள்? 'என்று ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

'குறித்த காணியில் விதை உற்பத்திச் செயற்பாடுகள் இடம் பெற்றுவருகின்றன. அவற்றைமேலும் விஸ்தரிக்கமுடியும். அதற்கு தொழில்நுட்பரீதியான புதிய திட்டமிலையும், அறிவையும் பிரயோகிக்கமுடியும். இதன்மூலம் வருமானத்தை அதிகரிக்கலாம். அதைவிடுத்து காணியை விடுவித்து தனியார் நிறுவனங்களுக்கு வழங்கும் செயற்பாட்டை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்' என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

### தோல்வியடைந்த பொருளாதார மத்தியநிலையம்

மேற்குறித்த காணிதொடர்பில் பேசும்போது அந்தக்காணியினால் தோல்வியில் முடிந்த அபிவிருத்தித் திட்டம் தொடர்பான மீளாய்வு ஒன்றை நினைவூட்ட வேண்டியதும் அவசியம். இல்லாவிடில் வரலாறு எம்மைப் பழிக்கும். வவுனியா விவசாயிகளின் நன்மைகருதி 2016 ஆம் ஆண்டு பொருளாதாரமத்திய நிலையம் ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்காக, மத்திய கிராமியப் பொருளாதார அமைச்சினூடாக 291 மில்லியன் ரூபா பணம் ஒதுக்கப்பட்டது. பொருளாதார மத்திய நிலையம் அமைக்கும் பணிகளும் நிறைவடைந்தன. அந்தப் பணத்தின் இன்றையபெறுமதி 1000 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம். ஆயினும் நான்குவருடங்கள் கடந்தநிலையிலும் விவசாயிகளின் பயன்பாட்டுக்கு அந்தப் பொருளாதார மத்திய நிலையம் வழங்கப்படவில்லை. இன்னமும் பூட்டியேகிடக்கின்றது. அதன் கட்டுமானங்கள் கூட பழுதடையும் நிலைக்கு வந்துள்ளன.

குறித்த மத்தியநிலையத்தினை ஓமந்தையில் அமைக்கலாம் என்று கடந்த 2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற மாவட்டஅபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் எட்டப்பட்டிருந்தது. எனினும் நகருக்கு அண்மையில்தான் அதனை அமைக்கவேண்டும் என்று ஒரு சாரார் வலியுறுத்தினர். குறிப்பாக தாண்டிக்குளத்தில் தற்போது சர்ச்சைக்குள்ளான' 65 ஏக்கர்காணியே' பொருத்தமானஇடம் என்றனர். வடமாகாணசபையிலும் அவ்வாறான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருந்தது.

ஆயினும் அன்றைய வடமாகாண விவசாயஅமைச்சு அதற்கான அனுமதியினை வழங்க

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பதினாலாவது மே பதினெட்டு



○ நிலாந்தன்



எதற்காகத் தமிழ் மக்கள் உயிர்களை, உறுப்புகளை, சொத்துக்களை கல்வியை இன்னபிறவற்றைத் தியாகம் செய்தார்களோ, எதற்காக லட்சக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்களோ,காணாமல் ஆக்கப்பட்டார்களோ,அதற்குரிய நீதி தமிழ்மக்களுக்கு கிடைக்க வேண்டும்.எந்தப் போராட்டத்தின் பெயரால் தமிழ் மக்கள் அழிக்கப்பட்டார்களோ, அந்தப் போராட்டத்தின் பலன் தமிழ் மக்களுக்கு கிடைக்கவேண்டும். எனவே நினைவுகூர்தல் எனப்படுவது தமிழ்மக்கள் போராடிய தன் பலனை பெறுவதற்கான ஓர் அரசியல் செயற்பாடுதான். நீதிக்கான தமிழ்மக்களின் போராட்டத்தில் அதுவும் ஒரு பகுதிதான்.

நவீன தமிழ் வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட இடத்தில்,ஒரு குறிப்பிட்ட காலகட்டத்துக்குள், அதிக தொகை மக்கள் கொல்லப்பட்ட ஒரு காலகட்டத்தை நினைவுகூர்வதே முள்ளிவாய்க்கால் நினைவுகூர்தல் ஆகும். எனவே முழுத் தமிழ் வரலாற்றிலும் நவீன காலத்தில் நிகழ்ந்த மிகப்பெரிய படுகொலை என்ற அடிப்படையில் அந்த உணர்ச்சிப் புள்ளியில் முதலாவதாக, ஈழத்தமிழர்களை ஒரு தேசமாகத் திரட்டலாம்.இரண்டாவதாக,உலகெங்கிலும் பரந்துவாழும் தமிழர்களை இன அடிப்படையில் திரட்டலாம். அவ்வாறு திரட்டி அந்தக் கூட்டுத் துக்கத்தை, கூட்டுக் கோபத்தை, கூட்டு அரசியல் ஆக்க சக்தியாக மாற்றினால் தமிழ் மக்களுக்கு நீதியைப் பெறுவதற்கான உந்துவிசையாக அது அமையும். எனவே நினைவு கூர்தல் எனப்படுவது நீதிக்கான போராட்டத்தின் பிரிக்கப்படவியலாத ஒரு பகுதி.

அதை அவ்வாறு வடிவமைக்கவேண்டும்.இப்பொழுது நடைமுறையில் உள்ள பொது ஏற்பாட்டுக் குழுவானது ஒரு குறிப்பிட்ட இடத்தை ஒரு குறிப்பிட்ட நாளில் நிர்வகிக்கும் ஒரு கட்டமைப்பே தவிர அது மேற்சொன்ன அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒரு பொதுக் கட்டமைப்பு அல்ல.

கடந்த 14 ஆண்டுகளாக பொருத்தமான ஒரு பொறிமுறையை,பொருத்தமான ஒரு பொதுக்கட்டமைப்பை தமிழ் மக்கள் உருவாக்கவில்லை.காலம் ஆற்றாத துக்கம் என்று எதுவுமில்லை.கூட்டுத் துக்கத்தை உரிய பொறிமுறைக்கூடாக கூட்டு ஆக்கச்சக்தியாக மாற்றவில்லை என்றால் அது வெறும் துக்கமாகச் சுருங்கிவிடும்.எனவே ஒரு கூட்டுத்துக்கத்தை கூட்டு ஆக்கச்சக்தியாக மாற்றி,அதை நீதிக்கான போராட்டத்தின் ஊக்கச் சக்தியாக மாற்றவேண்டும்.அதற்கு வேண்டிய பொறிமுறையும் கட்டமைப்பும் உருவாக்கப்படவேண்டும். இது முதலாவது.

இரண்டாவது, முள்ளிவாய்க்காலை நினைவு கூர்வது என்பது ஒரு யுத்த களத்தின் இறுதிக் கட்டத்தை நினைவு கூர்வதுதான். அந்த யுத்தகளத்தில் தமிழ் மக்களுக்கு தாமாக முன்வந்து தம் உயிர்களைக் கொடுத்தவர்கள்,உறுப்புகளை இழந்தவர்கள்,கல்வியை இன்ன பிறவற்றை இழந்தவர்கள்,என்று ஆயிரக்கணக்கானவர்கள் உண்டு.போரில் நேரடியாக சம்பந்தப்படாமலேயே கொல்லப்பட்டவர்களும் காணாமல் ஆக்கப்பட்டவர்களும் உண்டு. அவர்களனைவர்க்கும் உதவி தேவை. நிவாரணம் தேவை.ஆறுதல் தேவை.ஆனால் கடந்த 14 ஆண்டுகளில் எத்தனை பேருக்கு அவ்வாறான உதவிகள் கிடைத்திருக்கின்றன?

புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகம் குறிப்பிடத்தக்க அளவுக்கு உதவிகளைச் செய்கின்றது.ஆனால் அது ஒரு மையத்திலிருந்து திட்டமிடப்பட்ட,ஒரு மையத்தில் இருந்து வழங்கப்படுகின்ற உதவி அல்ல.கடந்த 14 ஆண்டுகளில் போரால் பாதிக்கப்பட்ட பலர் கைவிடப்பட்டிருக்கிறார்கள்.போரில் ஈடுபட்ட பலர் கைவிடப்பட்டிருக்கிறார்கள்,அல்லது அவமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.இறுதிக்கட்டப் போரில் தமது குடும்பத்தின் உழைக்கும் நபரை அல்லது நம்பிக்கை நட்சத்திரமாக இருந்தவரை அல்லது வருமான வழியை இழந்த பல குடும்பங்கள் உண்டு.அந்தக்குடும்பங்கள் யாவும் கடந்த 14 ஆண்டுகளில் தேறி எழுந்துவிட்டனவா இல்லையா என்று பார்க்கவேண்டும்.போரால் பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்தின் வீட்டில் அல்லது ஒரு தியாகியின் வீட்டில் அல்லது காணாமல் ஆக்கப்பட்டவரின் வீட்டில் அடுப்பு எரியவில்லை என்றால்,முள்ளிவாய்க்காலில் ஏற்றப்படும் சுடர்களின் மகிமை குறைந்து விடும். எனவே போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கு ஒரு பொருத்தமான பொறிமுறையும் அதற்கு வேண்டிய கட்டமைப்பும் தேவை.

புலம்பெயர்ந்த தமிழ்மக்களிடம் போதியளவு பணம் உண்டு.உதவுவதற்கு விருப்பமும் உண்டு.ஆனால் பொருத்தமான ஒரு பொறிமுறையை, பொருத்தமான ஒரு கட்டமைப்பை யார் உருவாக்குவது?கடந்த 14 ஆண்டுகளாக அவ்வாறான கட்டமைப்புகளை ஏன் உருவாக்க முடியவில்லை?

குறிப்பாக,முன்னாள் இயக்கத்தவர்களின் கதி என்னவென்று பார்க்க வேண்டும். நடுத்தர வர்க்கத்தை சேர்ந்தவர்கள் வசதியான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று விட்டார்கள். அல்லது நாட்டில் ஏதோ ஒரு விதத்தில் "செற்றில்ட்" ஆகிவிட்டார்கள்.ஆனால் இப்பொழுதும் செற்றில்ட் ஆகாத பல குடும்பங்கள் உண்டு. 2009 க்குப் பின் முன்னாள் இயக்கத்தவர்கள் மத்தியில் குடும்பங்கள் பிரிந்திருக்கின்றன. பிள்ளைகள் கைவிடப்பட்டுள்ளன.பெற்றோர் அநாதைகள் ஆகியிருக்கிறார்கள்.போரில் பட்ட காயத்தின் விளைவாக ஏற்பட்ட நோய்க்கு மருத்துவம் செய்யக் காசு இல்லாமல் தத்தளிக்கும் பலர் உண்டு.என்ன நோய் என்று தெரியாமலேயே இறந்து போன பலர் உண்டு. இவர்களுக்கெல்லாம் உதவ ஏதாவது கட்டமைப்பு இருக்கிறதா?இல்லையென்றால் யார் பொறுப்பு?

இலங்கைத் தீவிலேயே போரால் பாதிக்கப்பட்ட தரப்புக்களில் இப்பொழுதும் அதிகம் ஆபத்துக்கு உள்ளாகக்கூடிய ஒரு வகுப்பினராக(most vulnerable) காணப்படுவது முன்னாள் இயக்கத்தவர்கள்தான்.நாட்டின் சட்ட அமைப்பின்படி புனர்வாழ்வு ஒரு தண்டனை அல்ல என்பதனை கடந்த 14 ஆண்டு காலம் நிரூபித்திருக்கிறது.இந்நிலையில் மீண்டும் மீண்டும் ஒரே குற்றத்துக்காகத் தண்டிக்கப்படக்கூடிய ஒரு தரப்பாக முன்னாள் இயக்கத்தவர்கள் காணப்படுகிறார்கள்.அது தொடர்பாக நமது சட்டத்தரணிகள் என்ன செய்திருக்கிறார்கள்?தனிப்பட்ட வழக்குகளில் தோன்றி குறிப்பிட்ட முன்னாள் இயக்கத்தவரை விடுதலை செய்திருக்கிறார்கள் என்பது உண்மை.ஆனால் அதை ஓர் அரசியல் விவகாரமாக மாற்றி அதற்கு வேண்டிய சட்ட ஏற்பாடுகளைக் கொண்டு வர ஏன் ஒருவரும் முயற்சிக்கவில்லை?

அது மட்டுமல்ல,முன்னாள் இயக்கத்தவர்கள் புனர்வாழ்வின் பின் ஜனநாயக அரசியலில் இறங்கினார்கள்.அவ்வாறு இறங்கியவர்கள் கூட்டமைப்பு,தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி,தமிழ் மக்கள் தேசியக்கூட்டணி போன்றவற்றில் இணைந்து தேர்தல் கேட்டார்கள். துயரம் என்னவென்றால் ஒருவருமே தேர்தலில் பெறுமதியான வெற்றிகளைப் பெறவில்லை.துயிலுமில்லங்களில் தமிழ்மக்கள் விட்ட கண்ணீர் யாவும் எங்கே போய்ச் சேருகின்றது? அதை யார் வாக்குகளாக மாற்றுகிறார்கள்?

"உன்னுடைய சமூகத்துக்காக நீ கல்வியைத் துறந்தாய், உறுப்புகளை இழந்தாய், உயிரைக் கொடுக்கச் சித்தமாக இருந்தாய், ஆனால் உனக்காக இந்தச் சனம் குறைந்தது உள்ளூராட்சிசபையில் ஒரு வட்டாரத்துக்குத் தேவையான ஆயிரம் வாக்குகளைக் கூடத் தரவில்லையே? அப்படியென்றால் உன்னுடைய இறந்த காலத்துக்குப் பொருள் என்ன? என்று ஒரு முன்னாள் இயக்கத்தவரின் பிள்ளை கேட்டால், அதற்கு அந்த தகப்பன் அல்லது தாய் என்ன பதில் சொல்ல முடியும்? அதே கேள்விக்கு தமிழ் மக்கள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

முன்னாள் இயக்கத்தவர்கள் தடுப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட பின் அவர்களை தடுப்பில் வைத்திருந்த தரப்பு அவர்களோடு உறவுகளைப் பேணும்.அது ஒரு யதார்த்தம்.அவ்வாறு பேணுவதன்மூலம் அரசாங்கம் இரண்டு விடயங்களைச் சாதிக்கலாம்,ஒன்று,அவர்களைக் கண்காணிக்கலாம்,இரண்டு,அவர்களோடு தொடர்ந்து தொடர்புகளைப் பேணினால்,அவர்களுடைய சொந்த மக்கள் முன்னாள் இயக்கத்தவர்களை சந்தேகப்பார்கள். எதிரியின் ஆட்கள் என்று முத்திரை குத்துவார்கள். எந்தச் சமூகத்துக்காக அவர்கள் போராடினார்களோ,அந்தச் சமூகமே அவர்களைப் புறமொதுக்கி,அவமதித்து விலகிச் செல்லும் ஒரு நிலையை ஏற்படுத்தலாம்.

கடந்த 14 ஆண்டுகளில் தமிழ்க் கட்சிகளே அவ்வாறு முன்னாள் இயக்கத்தவர்களைக் குற்றம்சாட்டி வருகின்றன. முன்னாள் இயக்கத்தவர்களில் ஒரு பகுதியினர் அவ்வாறு அரசு புலனாய்வுத் துறையோடு சேர்ந்து செயற்படக்கூடும்.ஆனால் அதற்காக எல்லாரும் அப்படியல்ல.கடந்த 14 ஆண்டுகளில் தேர்தலில் இறங்கிய முன்னாள் இயக்கத்தவர்களில் யாருமே பொருத்தமான வெற்றிகளைப் பெறாததற்கு என்ன காரணம்?இந்த விடயத்தில் முன்னாள் இயக்கத்தவர்களின் கட்சியை அரச புலனாய்வுத் துறையின் ஆட்கள் என்று விமர்சிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் நின்று தேர்தல் கேட்டவர்களும் இதுவரை வெற்றி பெறவில்லை என்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

எனவே இறந்தவர்களை நினைவு கூர்வது என்பது அவர்கள் கொல்லப்பட்ட யுத்த களத்தை நினைவு கூர்வதுதான்.அந்த யுத்த களத்தில் தமது சமூகத்துக்காகப் போராடியவர்களை அவர்களுடைய நோக்கு நிலையில் இருந்து புரிந்து கொள்ள முயற்சிப்பதும்தான். இது இரண்டாவது.

மூன்றாவது,இறந்தவர்களை நினைவுகூர்வது என்பது,அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு நினைவுகளைக் கடத்துவது.நீதிக்கான தமிழ்மக்களின் போராட்டம் மேலும் நீண்ட காலத்துக்கு இழுபடலாம் அதுமட்டுமல்ல கடந்த 14 ஆண்டுகளில் தொழில்நுட்பப் பெருக்கம் காரணமாகவும்,தலைமைத்துவ வெற்றிடம் காரணமாகவும்,புதிதாக எழுந்து வரும் ஒரு தலைமுறை பெருமளவுக்கு அரசியல் நீக்கம் செய்யப்பட்டதாகவோ,அல்லது இலட்சிய நீக்கம் செய்யப்பட்டதாகவோ மாறிவருகின்றது.அந்தத் தலைமுறைக்கும், உலகெங்கிலும் புலம்பெயர்ந்து சிதறி வாழும் ஈழத்தமிழர்களின் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் நினைவுகளைக் கடத்த வேண்டியிருக்கிறது. நினைவுகளின் தொடர்ச்சிக்குள் ஒரு தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டியிருக்கிறது. அதற்கு நினைவு கூர்தல் அவசியம். இது மூன்றாவது.

நாலாவதாக,நினைவு கூர்தல் எனப்படுவது,ஒரு கூட்டுச் சிகிச்சை போன்றது. துக்கத்தை கொட்டித் தீர்க்கும் நாளும், இடமும் அது.வெளிவழிய விடப்படாத துக்கம் உள்ளுக்குள் கிடந்து குமைந்து அடங்காத கோபமாக மாறிவிடும். அல்லது நோயாக மாறிவிடும்.எனவே உளவியல் அர்த்தத்திலும் பண்பாட்டு அர்த்தத்திலும் துக்கத்தை வெளிவழிய விடவேண்டும். அந்த அடிப்படையில் நினைவு கூர்தல் என்பது ஒரு குணமாக்கல் செய்முறை.ஒரு பண்பாட்டுச் செய்முறை.

மேற்கண்ட நான்கு முக்கியமான காரணங்களையும் முன்வைத்து நினைவு கூர்தலை ஒழுங்குபடுத்தவேண்டும். ஆனால் கடந்த 14 ஆண்டுகளாக நினைவு கூர்தல் அவ்வாறு ஒழுங்குபடுத்தப்படுகின்றதா?அவ்வாறு ஒழுங்குபடுத்தப்படவில்லை என்றால் அதற்கு யார் பொறுப்பு?


இந்தக் கேள்வியை மறுவளமாகக் கேட்டால் தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு? என்றுதான் கேட்கவேண்டும். ஏனென்றால் கடந்த 14 ஆண்டுகளாக தமிழ் மக்களின் அரசியல் எனப்படுவது கட்சி அரசியலாகத்தான் காணப்படுகின்றது. கொழும்பு அல்லது வெளித்தரப்புகள் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு பதில்வினை ஆற்றும் அரசியலாக தறுக்கணித்துப் போய்விட்டது.அது தேசத்தைக் கட்டியெழுப்பும் ஓர் அரசியல் அல்ல. சிங்கள - பௌத்த மயமாக்கலுக்கு எதிராகவும், காணிப்பறிப்புக்கு எதிராகவும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கேட்டும் தமிழ்மக்கள் போராடுகிறார்கள்தான்.ஆனால் அவற்றில் பெரும்பாலானவை,எனது கடந்த வாரக் கட்டுரையில் கூறியது போல,பதில் வினையாற்றும்(reactive)நிகழ்வு மைய அரசியல்தான்(event oriented). அவை ஒரு தேசநிர்மாணத்துக்குரிய கட்டியெழுப்பும் (proactive) அரசியல் அல்ல.

ஒரு தேசத்தைக் கட்டியெழுப்பும் அரசியலில்தான் நினைவு கூர்தல், அதற்குரிய மகிமையோடும் அரசியல் அடர்த்தியோடும் அனுஷ்டிக்கப்படும்.அதற்குரிய பல்வகைமையோடு அனுஷ்டிக்கப்படும். இல்லையென்றால் கட்சிகளாக பிரிந்திருக்கும் மக்கள் நினைவுகூர்தலை அதற்குரிய பெறுமதியுணர்ந்து அனுஷ்டிக்கப் போவதில்லை.மாறாக,அது ஒரு துக்க நிகழ்வாக,அல்லது செயலுக்குப் போகாத பிரகடனங்களை வாசிக்கும் ஒரு நிகழ்வாக,ஒரு சடங்காகச் சுருங்கிப் போய்விடும். இம்முறை,பல்கலைக்கழக மாணவர்கள் சமூகப்பங்களிப்போடு கஞ்சி காய்ச்சுவது ஒரு நல்ல முன்னுதாரணம்.அதேசமயம் கட்சிகளுக்கு எதிராக கருத்துக்களைக் கூறாமல் விட்டால் அதுவும் ஒரு நல்ல முன்னுதாரணம்.முள்ளிவாய்க்காலில் தாமாகத் திரளக்கூடிய மக்களை,கட்சிகளும் - பொதுக்கட்டமைப்புகளும் - மாணவர்களும் பிரிக்காமல் விட்டாலே போதும். இறந்தவர்களின் ஆத்மா இந்த ஒரு விடயத்திலாவது சாந்தி அடையும். ஏனெனில் மனநல மருத்துவ நிபுணர் சிவதாஸ் கூறுவதுபோல "நினைவுகூர்தல் எனப்படுவது காயங்களைக் குணப்படுத்துவது, மாறாகக் காயங்களைக் கிளறுவது அல்ல".

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காணித் திருத்தச் சட்டமும் தமிழ்க் கட்சிகளுடனான பேச்சும்

○ அ.நிக்ஸன்



வடக்கு - கிழக்குத் தமிழ்பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களில் உள்ள காணிகளைக் கொழும்பை மையமாகக் கொண்ட இலங்கை ஒற்றையாட்சி அரசின் சில திணைக்களங்கள் அபகரித்து வரும் சூழலில், காணிக் கட்டளைச் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதன்கிழமை உத்தரவிட்டிருக்கிறார்.

அதுவும் தமிழ்த்தேசியக் கட்சிகளுடன் பேச்சு நடத்துவதற்கு முதல் நாள் இந்த உத்தரவை ரணில் பிறப்பித்திருக்கிறார்.

தமிழர் பிரதேசங்களில் பௌத்த மயமாக்கல் நாளுக்கு நாள் வெவ்வேறு வடிவங்களில் அரசியல் யாப்புச் சட்டங்களுக்கு மாறாகவும், சட்டங்களுக்கு அமைவானது என்று காண்பிக்கப் போலியாகத் தயாரிக்கப்பட்ட காணி உறுதிகளுடனும் பௌத்த மயமாக்கல் வேகமடைந்துள்ளது. 1988 இல் இலங்கை நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் உள்ள காணி - பொலிஸ் அதிகாரங்கள், குறிப்பாகக் காணி அதிகாரங்கள் அமுல்படுத்தப்படாமல் இருக்கும் நிலையில் காணித் திருத்தக் கட்டளைச் சட்டம் குறித்து ரணில் பரிந்துரைத்திருக்கிறார். 2015 இல் மைத்திரி - ரணில் அரசாங்கத்தின்போதும் காணித் திருத்தக் கட்டளைச் சட்டம் குறித்து அப்போது பிரதமராக இருந்த ரணில் துரித நடவடிக்கைகளை எடுத்திருந்தார்.

1983 இல் போர் ஆரம்பிப்பதற்கு முன்னர் , குறிப்பாக 1948 இல் இருந்து அரச அதிகாரிகளின் ஏற்பாட்டில் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் காணிகள் அபகரிக்கப்பட்டுச் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இடையில் நடைபெற்ற முப்பது வருட போரினால் குடியேற்றங்கள் தடைப்பட்டிருந்தன அல்லது தாமதமடைந்திருந்தன என்று கூறலாம். போரை இல்லாதொழித்த மஹிந்த ராஜபக்ச, 2009 மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் இராணுவத்தைப் பயன்படுத்தியே காணிகளை அபகரித்தார்.

ஆனால் கொழும்பை மையமாகக் கொண்ட தொல்பொருள் திணைக்களம், வன இலாகாத் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய அரச நிறுவனங்கள் மூலம் தமிழர்களின் காணிகளை அபகரிக்கும் உத்தியை ரணில் 2015 இல் பிரதமராக இருந்தபோது அறிமுகப்படுத்தியிருந்தார். இலங்கை ஒற்றையாட்சிச் சட்டத்தின் கீழ் காணிகளை அபகரிக்கும் இந்தத் திணைக்களங்களுக்குப் பொலிஸார் ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர். இராணுவமும் ஆதரவு வழங்கியிருந்தது.

2020 இல் ஜனாதிபதியாகப் பதவியேற்ற கோத்தாபய ராஜபக்சவும் , ரணில் கையாண்ட அதே உத்தியைத்தான் தொடர்ந்தார். எனினும் 2022 ஜூலை மாதம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற ரணில், காணி அபகரிப்புகளை முழுமையாகச் சட்டரீதியாக்கும் ஏற்பாடுகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளார். நடைமுறை அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு ஏற்றவாறு காணிக் கட்டளைச் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ள ரணில், பணிகளைத் துரிதப்படுத்துவதற்கு தகுதியான குழுவொன்றை நியமிக்குமாறும் அறிவுரை வழங்கியுள்ளார்.

காணி முகாமைத்துவம் குறித்து நிறுவனங்களின் சட்ட ஏற்பாடுகளில் திருத்தம் மேற்கொள்வது மற்றும் புதிய சரத்துகளை திருத்துவது, உள்ளீடு செய்வது குறித்து ஜனாதிபதி அலுவலகத்தில் சென்ற புதன்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் போது ரணில் வலியுறுத்தியிருக்கிறார். காணிப் பயன்பாடுகள் தொடர்பாக பல்வேறு சந்தர்ப்பங்களில் கொண்டுவரப்பட்டுள்ள சட்டத் திருத்தங்கள் நடைமுறை அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு பொருத்தமற்றதாகக் காணப்படுவதாகவும் ரணில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குக் காணிகளை பெறுவதில் காணப்படுகின்ற சிக்கல்களை நீக்கிப் புதிய தேசிய காணிக் கொள்கை ஒன்றை உருவாக்குவது தொடர்பாகவே ரணில் அதிகமாகப் பிரஸ்தாபித்திருக்கிறார்.

காணி ஆணைக்குழுவின் ஊடாக மாகாணசபைகளின் காணிகள் தொடர்பான பிரச்சினைகளை நிவர்த்திக்குமாறும். கிராமசேவகர் பிரிவுகளில் உள்ள காணி உரிமையாளர்களின் விபரங்கள் மற்றும் பயன்படுத்தப்பட்டுள்ள காணிகள், பயன்படுத்தப்படாமல் இருக்கும் காணிகள் தொடர்பாகக் கண்டறிந்து பிரதேசசெயலாளர் மட்டத்தில் அறிக்கையொன்றை தயாரிக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு உத்தரவுமிட்டுள்ளார். ஆனால் இலங்கைத்தேசிய காணி ஆணைக்குழு கடந்த முப்பத்தைந்து வருடங்களாக உருவாக்கப்படவில்லை என்பது தான் இங்கே வேடிக்கை. இந்த நிலையிலேயே புதிய தேசியக் காணிக் கொள்கை ஒன்றை வகுக்குமாறு ரணில் உத்தரவிட்டிருக்கிறார். காணிச் சட்டத் திருத்தம் பற்றித் தேசியக் கொள்கை ஒன்றை வகுக்க வேண்டுமானால், வடக்கு - கிழக்கு மாகாண பிரதிநிதிகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற சிந்தனை எதுவும் இல்லாமல் ரணிலின் உத்தரவு அமைந்துள்ளது. அல்லது பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மாகாணங்களை உள்ளடக்கிய தேசிய காணி ஆணைக்குழுவை உருவாக்க வேண்டும்.

ஆனால் அவ்வாறான திட்டங்கள் எதுவுமேயில்லாமல் வெறுமனே தேசிய காணிக் கொள்கை ஒன்றை வகுக்குமாறு முற்றிலும் சிங்கள அதிகாரிகளைக் கொண்ட குழுவிடம் உத்தரவிட்டுள்ள நிலையில், கடந்த வியாழக்கிழமை தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் ரணில் பேச்சு நடத்தியிருக்கிறார். பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் காணி அதிகாரங்கள் உள்ளடக்கப்பட்டு மாகாணங்களை உள்ளடக்கிய தேசிய காணி ஆணைக்குழு ஒன்றை உருவாக்க வேண்டுமெனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரையும் தேசிய காணி ஆணைக்குழு மற்றும் மாகாணங்களை உள்ளடக்கிய பொலிஸ் ஆணைக்குழுக்கள் உருவாக்கப்படாமல் கொழும்பை மையமாகக் கொண்ட சிங்கள அதிகாரிகள் அங்கம் வகிக்கும் அரச திணைக்களங்களிடம் பொறுப்புகள் பகிரப்படுகின்றன.

## 'தமிழர் தாயகம்' என்பதை இல்லாமல் செய்ய ரணில் கையாளும் உத்தி

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் சட்டத்தைப் புதுப்பித்து அதன் செயற்பாடுகளை மறுசீரமைப்பதற்குத் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிடம் (கோப் குழு) 2018 இல் ரணில் பிரதமராக இருந்தபோது உத்தரவிட்டிருந்தார். இந்த முயற்சியை 2020 இல் ஜனாதிபதியாக இருந்த கோத்தாபய ராஜபக்ச தொடர்ந்தார்.

2020 ஆம் ஆண்டுக்கான காணிச் சீர்திருத்த ஆணைக்குழு பற்றியதான, கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் அதன் சமகாலச் செயலாற்றுகை குறித்து ஆராய கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தலைமையில் அப்போது கூட்டம் ஒன்றும் நடைபெற்றிருந்தது. இதில் பல்வேறு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டதுடன், இந்தப் பரிந்துரைகள் நிறைவேற்றப்படுவது பற்றி ஆராய்ந்து பார்ப்பதற்குக் காணி சீர்திருத்த ஆணைக்குழுவை அடுத்தடுத்துக் கூட்ட வேண்டிய அவசியம் குறித்தும் யோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இந்த ஆணைக்குழு காணிகளைக் கையகப்படுத்தும்போது காணப்படும் பிரச்சினைகள் கோப் குழுவினால் கவனம் செலுத்தப்பட்டதுடன், இதற்கமைய கடந்த இருபது வருடங்களில் காணி கையகப்படுத்தல் தொடர்பான விரிவான தகவல்கள் அடங்கிய அறிக்கையும் 2018 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அது மாத்திரமல்ல காணிகளை அடையாளம் காணுதல் மற்றும் பெறுமதியை மதிப்பீடு செய்தல் என்பவற்றுக்காக விசேட செயலணியொன்று அமைக்கப்பட வேண்டுமெனக் கோப் குழு அப்போது பரிந்துரை வழங்கியிருந்தது.

குறிப்பாக வடக்கு - கிழக்கில் பௌத்த குருமார் விகாரைகளை அமைக்கும்போது ஏற்படுகின்ற தடைகள் குறித்தும், பௌத்த குருமார் அடையாளப்படுத்தியுள்ள காணிகள் பற்றியும் உரையாடப்பட்டிருந்தன. ஆகவே 2018 இல் கோப் குழு முன்வைத்த பரிந்துரைகளுக்கு ஏற்ப கடந்த இரண்டு வருடங்களாக இலங்கைத்தீவின் அனைத்து மாகாணங்களிலும் உள்ள காணிகள் பற்றிய விபரங்கள் பெறப்பட்டாலும், வடக்கு - கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்களின் காணிகள் பற்றிய விபரங்களே அதிகமாகப் பெறப்பட்டுத் தொல்பொருள் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டதாக உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன. இந்தப் பின்னணியிலேயே காணிச் சட்டங்களைத் திருத்துவது தொடர்பாக அதிகாரிகளுடன் ரணில் உரையாடியிருக்கிறார் எனத் தகவல்கள் கசிந்துள்ளன.

பத்துலட்சம் காணித் துண்டுகளைப் பகிர்ந்தளிக்கும் வேலைத் திட்டம் தொடர்பாகவும் காணி பகிர்ந்தளிப்பு தொடர்பான தேசியக் கொள்கைக்குள் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் செயற்பாடுகளை உள்ளடக்கித் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ள கோப் குழு அப்போது பரிந்துரைத்தது. குறிப்பாக 1972 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் சட்டத்தை தற்போதைய காலத்துக்கு ஏற்ற வகையில் புதுப்பிக்கவேண்டும் என 2018 கோப் குழு வழங்கிய பரிந்துரைகளின் பிரகாரமே ரணில் சென்ற புதன்கிழமை காணிச் சட்டத் திருத்தங்கள் குறித்து விளக்கமளித்திருக்கிறார்.

அதுவும் வடக்கு - கிழக்கில் தமிழர்களின் பாரம்பரியக் காணிகள் அபகரிக்கப்பட்டுச் சிங்களக் குடியேற்றங்கள் மற்றும் புத்தர் சிலை வைத்தல், பௌத்த விகாரைகள் கட்டுதல் போன்ற செயற்பாடுகள் தீவிரமடைந்து வரும் நிலையில், காணிச் சட்டங்கள் பற்றிய திருத்தங்கள் பற்றி ரணில் ஆராய்ந்திருக்கிறார். பௌத்த மயமாக்கலைத் தடுப்பதற்குரிய எந்த ஓர் ஏற்பாடுகளும் இன்றி காணிச் சட்டங்கள் பற்றிய கூட்டத்தை ரணில் நடத்தியமை குறித்துத் தமிழ்த்தரப்பு எந்தவிதமான கருத்துக்களையும் வெளியிடவில்லை. வடக்கு - கிழக்கில் உள்ள காணிகள் பற்றியும் அபிவிருத்தி என்ற போர்வையில் கொழும்பை மையமாகக் கொண்ட அரச மற்றும் தனியார் நிறுவனங்களிடம் கையளிப்பது பற்றியே இக் கூட்டத்தில் பேசப்பட்டுள்ளதாக உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன. இவ்வாறான சூழலிலேதான், இரண்டு நாட்கள் தொடர்ச்சியாகத் தமிழ்த்தேசியக் கட்சிகளுடன் ரணில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தார். ஆனால் காணிகள் பற்றியோ குறிப்பாக பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள இலங்கைத் தேசிய காணி ஆணைக்குழுவை நியமிப்பது குறித்தோ பேசப்பட்டதாகத் தெரியவில்லை. பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வல்ல என்பது பட்டவர்த்தனமாக வெளிப்பட்ட தகவல். ஆனாலும் ஒற்றையாட்சிச் சட்டத்தில் உள்ள மாகாணங்களுக்குரிய காணி அதிகாரங்கள்கூட கொழும்பில் உள்ள சிங்கள அதிகாரிகளை மையப்படுத்திய தொல்பொருள் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் வன இலாகாத் திணைக்களம் என்பவற்றிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.


ஆகவே தமிழர் நிலங்களில் காணி அபகரிப்புகள் சட்டரீதியாக அதாவது தொல்பொருள் திணைக்களத்துக்குரிய பௌத்த மரபுரிமை சார்ந்தது என்ற அங்கீகாரத்தை ரணில் விக்கிரமசிங்க கனகச்சிதமாக உறுதிப்படுத்திவிட்டு, மறுபுறம் தமிழ்த்தேசியக் கட்சிகளுடன் பேச்சு நடத்தியமைதான் இங்கே வேடிக்கை. தமிழர் பிரதேசங்களில் நிலங்களை அபகரித்துப் பௌத்த தேசிய மரபுரிமைகளைச் செயற்கையாக உருவாக்கிச் சிங்களப் பிரதிநிதித்துவத்தையும் சமப்படுத்தினால் வடக்கு- கிழக்கில் பதின்மூன்றை நடைமுறைப்படுத்துவதில் பிரச்சினை இருக்காது.

குறிப்பாகப் 'பதின்மூன்று 'என்ற தனது முதுகெலும்பு தொடர்பாக இந்தியா கடும் அழுத்தங்களைக் கொடுத்தாலும் சிங்கள ஆட்சியாளர்களுக்கு அதனைச் செயற்படுத்தப் பிரச்சினை இருக்காது. ஏனைய மாகாணசபைகள் போன்று, தமிழ். முஸ்லிம் மற்றும் சிங்களம் கலந்த மாகாணசபையாக வடக்குக் கிழக்கு மாகாணசபைகளும் இயங்கும். தமிழ்த் தேசியம் தமிழர் தாயகம்என்ற கோட்பாடு இல்லாமல் போகும். எனவே ஜே.ஆர். அன்று நினைத்த காரியத்தை, ரணில் இன்று ஒழுங்குமுறையாகச் செய்து முடிக்கிறார். 2009 இல் மஹிந்த போரை இல்லாதொழித்தார். 2023 இல் ரணில் அரசியல்ரீதியாகத் தமிழ்த்தேசியத்தை நீக்கம் செய்கிறார். அதாவது "தமிழ்த்தேசியம்" "தமிழர் தாயகம்" என்பதன் முதுகெலும்பான காணி நிலத்தைத் துண்டாக்கி இலங்கை ஒற்றையாட்சி முறைமைக்குள் ஒருங்கிணைக்கவே சிங்கள அதிகாரிகளுடன் ரணில் பேச்சு நடத்தியிருக்கிறார் . மறுபுறத்தில் "தமிழ்த்தேசியம்" "தமிழர் தாயகம்" என்பதை ஒற்றையாட்சிக்குள் விரைவாகக் கரைக்க தமிழ்க் கட்சிகளுடனும் ரணில் உரையாடியிருக்கிறார்.


ஆகவே தற்போது வெளிப்பட்டுள்ள இந்தப் பின்னணியிலேயே 1988 இல் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் காணி உரிமைகள் வழங்கப்பட்டிருந்தாலும், காணிச்சீர்த்திருத்த ஆணைக்குழுவின் அதிகாரங்கள் 1972 இல் இருந்து கொழும்பை மையப்படுத்தி இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வருவதையும் புரிந்துகொள்ள முடிகிறது. மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணி அதிகாரங்களை காணிச் சீர்திருத்த ஆணைக்குழு கட்டுப்படுத்தும் வல்லமை கொண்டது. இந்தக் காரணத்தாலேயே இலங்கைத் தேசிய காணி ஆணைக்குழுவை அமைக்கச் சிங்கள ஆட்சியாளர்கள் எவரும் விரும்பவில்லை என்பதும் கண்கூடு. ஆகவே 2009 மே மாதத்தின் பின்னரான சூழலில் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அரசியல் தீர்வு என்ற ஆழமான கருத்தை ஒரு வார்த்தையில் நிறுவாமல் பல கட்சிகளாகவும், பல குரல்களாகவும் தமிழ்த்தரப்பு சிதறுண்டு கிடப்பதை, ரணில் தனது அரசியலுக்குச் சாதமாகவும், "இலங்கைத் தேசியம்" என்ற கட்டமைப்பை மேலும் உறுதிப்படுத்தவும் மிக நுட்பமாகப் பயன்படுத்துகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






அ.அபிசாயினி
தரம் - 6
யா/அச்சுவேலி
புனிததெரேசாள் மகளிர்
கல்லூரி



ஜெ.ஜெகமதுசன்
தரம் 8
யா/நல்லூர் ஸ்ரீ
விக்னேஸ்வரா
வித்தியாலயம்




சி.அபிந்திகா,
தரம் 1A
யா/ மானிப்பாய்
மகளிர் கல்லூரி.



சு. மாதுளன்
தரம்- 2
யா/ கல்வயல்
சண்முகானந்த
வித்தியாலயம்

# அலட்சியம் வேண்டாம்



ஒரு கிராமத்து வீட்டில் எலி, சேவல், ஆடு மூன்றும் இருந்தன. ஒருநாள் அந்த வீட்டில் எலிப்பொறி வைக்கப்பட்டிருந்ததை எலி கண்டது. "இந்த வீட்டில் எலிப்பொறி இருக்கிறது. அதில் யாரும் மாட்டிக் கொள்ளாதீர்கள்" என்று சேவலிடமும், ஆட்டிடமும் சொன்னது.

அதற்குச் சேவல், "எலிப்பொறி உனக்குத் தொடர்புடைய விஷயம். நான் ஏன் கவலைப்பட வேண்டும்?" என்றது. ஆடும், "எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. நீ மட்டும் அகப்படாமல் பார்த்துக் கொள்" என்றது.

அன்றிரவு எலிப்பொறியில் ஏதோ அகப்பட்ட சத்தம் கேட்டவுடன், அந்த வீட்டுப் பெண் இருட்டில் அந்தப் பொறியில் கை வைத்தார். பொறியில் மாட்டியது பாம்பாக இருந்ததால் அது அவரைக் கடித்துவிட்டது. மருத்துவரைக் கொண்டு அந்தப் பெண்ணைக் காப்பாற்றிவிட்டனர். அந்தக் கிராமத்து வழக்கப்படி அந்தப் பெண் உடல்நிலை தேறுவதற்கு அந்தச் சேவலைக் கொன்று அதன் சாறு கொடுக்கப்பட்டது.

பின்னர் அந்தப் பெண்ணைப் பார்க்க வந்த உறவினர்களுக்கு அந்த ஆடும் விருந்தானது.

விபரீதங்களைப் புரிந்து கொள்பவர்கள் தமக்கென வைக்கப்பட்ட பொறிகளிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள். எச்சரிக்கை விடுத்தும் அலட்சியப்படுத்துபவர்கள் அவதிப்படுகிறார்கள். முன்னெச்சரிக்கையுடன் நடப்பவர்களுக்கு எந்தவிதமான தீங்குகளும் ஏற்படாது. 'எமக்கு வராது' என்ற அலட்சியப் போக்கை விட்டொழித்து, நம்மைச் சுற்றி நடப்பது நமக்கும் ஏற்படலாம் என்ற முன்னெச்சரிக்கையுடன் செயற்படுதல்வேண்டும்.

## ஆங்கிலம் கற்போம்

| | |
|---|---|
| Put it | அதை போடுங்கள் |
| Put here | இங்கே போடுங்கள் |
| Don't take | எடுக்க வேண்டாம் |
| Take it | அதை எடுங்கள் |
| Ask him | அவரிடம் கேளுங்கள் |
| Do it now | அதை இப்போ செய் |
| Get out | வெளியே போ |
| Come in | உள்ளே வா |
| Give me | என்னிடம் கொடு |
| Like us | எங்களைப் போல |
| Don't run | ஓட வேண்டாம் |
| Don't Jump | குதிக்க வேண்டாம் |
| Keep it | அதை வையுங்கள் |
| Work hard | கடினமாக உழை |
| Do well | நன்றாக செய் |
| Well said | நன்றாக சொன்னாய் |
| Don't worry | கவலைப்படாதே |
| Definitely | நிச்சயமாக |
| Hurry up | சீக்கிரம் |
| Do something | ஏதாவது செய் |
| Let's go | போவோம் |
| No thanks | வேண்டாம் நன்றி |
| Anyway | எப்படியும் |
| No reason | காரணம் இல்லை |

## மாணவர்களே!





நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்..

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

## வித்தியாசம் காண்க





## வியாழன் கோள்



சூரியக் குடும்பத்தில் மிகப் பெரிய கோள் வியாழன். இது சுழலும் மேகங்களால் மூடப்பட்டிருக்கிறது. வியாழன் கோளில் பல நூற்றாண்டுகளாகப் புயல்கள் மையம் கொண்டுள்ளன. அதனால்தான் வியாழன் கோள் மீது சிவப்பு வண்ணங்கள் தெரிகின்றன.

வியாழன் மிகப் பெரிய கோளாக இருந்தாலும் திடமான மேற்பரப்பைக் கொண்டிருக்கவில்லை. வியாழனின் மேற்பரப்பு வாயுக்களால் ஆனது. ஆனால், வியாழனின் உள்பகுதி பூமி அளவுக்குத் திடமான பகுதியைக் கொண்டிருக்கலாம் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். சனிக்கு மட்டுமின்றி வியாழன் கோளுக்கும் வளையங்கள் இருக்கின்றன. ஆனால், அவை நன்றாகப் பார்க்க முடியாத அளவுக்கு மங்கலாக உள்ளன.

கோள்களிலேயே சனிக்குத்தான் 83 நிலவுகள் இருந்தன. 80 நிலவுகளுடன் வியாழன் இரண்டாவது இடத்தில் இருந்தது. ஆனால், தற்போது மேலும் 12 நிலவுகளை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதனால் வியாழன் 92 நிலவுகளுடன் முதல் இடத்தில் இருக்கிறது.

வியாழன் சூரியனில் இருந்து ஐந்தாவது கோள். செவ்வாய், சனி ஆகியவை வியாழனின் பக்கத்து கோள்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இயல்வாணன்

ஒரு மொழிபெயர்ப்பாளராகவும், தேர்ந்த வாசகராகவும், விமர்சகராகவும் விளங்கியவர் 'தேவா' என இலக்கிய உலகில் அறியப்பட்ட திருச்செல்வம் தேவதாஸ். இவர் கடந்த 25 .03.2023 அன்று தனது 70 ஆவது வயதில் காலமாகிவிட்டார். 1952 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 18 ஆம் திகதி மன்னார் மாவட்டத்தின் விடத்தல் தீவில் பிறந்த தேவா யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் படித்தவர். அதன் பின்னர் பட்டயக் கணக்காளர் படிப்பை மேற்கொண்டிருந்த நிலையில் மகாராஜா நிறுவனத்திலும், பின்னர் பிறிமா நிறுவனத்தில் பணியாற்றினார். பணி நிமிர்த்தமாக பாகிஸ்தான் பயணமான நிலையில் அங்கிருந்து சிரியா, துருக்கி, பல்கேரியா, ஒஸ்திரியா வழியாக நீண்ட இடர் மிகுந்த தரை வழிப் பயணத்தை மேற்கொண்டு 1983 ஆம் ஆண்டு சுவிற்சர்லாந்தில் அகதியாகத் தஞ்சமடைந்தார். தனது ஓய்வுக் காலம் வரை அங்கேயே பணி புரிந்தார். டொச், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் மிக்க அவர் அந்த மொழிகளில் வந்த தேர்ந்த படைப்புகளை வாசிக்கும் ஆர்வமும் தேடலும் கொண்டிருந்தார். வாசிப்பு, மாற்று இசை, பயணம் ஆகிய மூன்றுமே அவருக்கு ஈர்ப்பானதும், அதிக நாட்டங் கொண்டதுமான துறைகளாகும். இவை பற்றியே நண்பர்களுடன் அதிகம் பகிர்ந்து கொண்டிருக்கிறார். எழுதியும் இருக்கிறார்.

இடதுசாரியச் சிந்தனையிலும் தேவா ஈர்ப்புக் கொண்டிருந்தார். இடதுசாரிகளுடன் அவருக்கு நெருக்கமானதாக தொடர்பு இருந்தது. "செங்காலனில் இடதுசாரிகள் சந்திக்கிற கபேயில் அவரைச் சந்திக்கலாம்"என்று அவரது நண்பர் ரவி குறிப்பிட்டுள்ளார். எனினும், இடதுசாரியச் சிந்தனைகளை அப்படியே மந்திரம் போல ஏற்றுக் கொள்ளாமல் அதன் மீதான விமர்சனங்களையும் தேடி வாசித்து, அதை நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டவராகவும் விளங்கினார். 1987 இல் சுவிஸில் வாசகர் வட்டமாக உருவாக்கப்பட்டு, பின்னர் மனிதம் குழுவாக அடையாளப்படுத்தப்பட்டவர்களுடன் இணைந்து செயற்பட்ட அவர் ஜனநாயகம், மனித உரிமைகள், மாற்றுக் கருத்துகள் சார்ந்து பேசியும், எழுதியும் வந்துள்ளார். டொச் மொழியில் வந்த நூல்களை மட்டுமல்லாது பத்திரிகைகளையும் வாசித்து தனது அறிவை இற்றைப்படுத்திக் கொண்டிருந்த தேவா வாசகர் வட்ட நிகழ்வுகளில் முக்கியமான உரையாளராகவும், விமர்சகராகவும் விளங்கினார்.

அவர்களால் வெளியிடப்பட்ட மனிதம் இதழ்கள் பலவற்றில் டொச் மொழியில் இருந்து தேர்ந்த கட்டுரைகள் பலவற்றை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். அவற்றில் பொப் மார்லியும் றேகே இசையும், நிக்கரகுவா - புரட்சியின் பின், ஜப்பான் - சூரிய சாம்ராஜ்யம், சூறாவளியின் கண்களில் 120 மில்லியன் குழந்தைகள், உளவியல் பார்வையில் நாசிசம் முதலான கட்டுரைகள் அதிகம் பேசப்பட்டன. ஜோன் ஜெனேயின் The Maid நாடகத்தை பணிப்பெண் என்ற தலைப்பில் மொழிபெயர்த்தார். இது கறுப்பு என்ற தொகுப்பில்(2002) இடம்பெற்றது.

அவர் டொச் மொழியில் இருந்து மொழிபெயர்த்த முதல் நூல் குழந்தைப் போராளி(2007). தனது ஒன்பதாவது வயதில் உகண்டாவின் புரட்சிப் படையான தேசிய எதிர்ப்புரட்சி இராணுவத்தில் (என்.ஆர்.ஏ) இணைந்த சைனா கெயிற்றற்சியின் அனுபவங்களை தமிழுக்கு கொண்டு வர விரும்பி அதனை மொழிபெயர்த்தார். அவர் தமிழில் மொழி பெயர்த்த பின்னரே பிரெஞ்சிலும், ஆங்கிலத்திலும் அந்நூல் வெளிவந்தது. எனினும் தமிழ் மொழிபெயர்ப்பு நூல் பிறகே வெளிவந்தது.





உகண்டாவின் இனக் குழுக்களுக்கிடையிலான மோதல்களில் குடும்ப உறவுகள் இறந்து போதல், பலதார மணப்பிரச்சினைகள், வறுமை, குடும்ப வன்முறை, ஆயுதக் குழுக்களின் வீராவேசப் பேச்சுகள் எனப் பல காரணங்களால் பதின்ம வயதுக் குழந்தைகள் போராளிகளாகிய வாழ்க்கை அனுபவங்களை கெயிற்றச்சியின் குழந்தைப் போராளி பேசுகிறது. கருப்புப் பிரதிகள் வெளியிட்ட இந்நூல் இரண்டு பதிப்புகள் கண்டுள்ளது. அவரது அடுத்த நூல் அனொனிமா முகம் மறைத்தவள்(2010). இரண்டாம் உலக யுத்த காலத்தில் ஜேர்மனியில் வாழ்ந்த ஒரு பெண்ணின் கதை. யுத்தத்தின் கொடூர முகத்தை வெளிக்காட்டும் கதையாக அது அமைந்திருந்தது. "அவள் யுத்தத்தின் பார்வையாளராகவோ, பங்கெடுப்பாளராகவோ இருந்திருக்கவில்லை. யுத்தம் அவள் மீதேதான் நடந்து முடிந்திருக்கிறது" என்பதே இந்நாவலின் சாரமாகும். பூபாளம் புத்தகப் பண்ணை வெளியிட்ட இந்நூலும் இரண்டு பதிப்புகள் கண்டது. அதன் பின்னர் இலங்கை எழுத்தாளரான உசுல பி.விஜயசூரிய எழுதிய அம்பரய(2016) இளைஞர் நாவலை ஆங்கிலம் வழியே தமிழுக்குக் கொண்டு வந்தார். சிங்கள கிராமப்புற வாழ்வியலை ஓர் இளைஞனின் பாத்திரத்துக்கூடாக அழகாகப் படம் பிடித்துக் காட்டும் வகையில் இந்த மொழிபெயர்ப்பு அமைந்திருந்தது.


அவரது மொழிபெயர்ப்பில் வந்த இன்னொரு நூல் என் பெயர் விக்டோரியா(2018). தொந்தா விக்டோரியா எழுதிய சுயகதை. ஆர்ஜென்ரீனாவில் 1976இல் நிகழ்ந்த ஆட்சிக் கவிழ்ப்பின் பின்னர் கடத்தப்பட்டுக் காணாமற்போனவர்கள் ஒருபுறம். கர்ப்பிணிகளாக்கப்பட்டவர்கள் மறுபுறம். அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் சர்வாதிகாரத்துக்குத் துணை போனவர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். அத்தகைய ஒரு பெண்ணின் கதைதான் இந்நூல்.

1994 ஆம் ஆண்டு சாகரவர்த்தனா கப்பலில் பணியாற்றிய போது விடுதலைப் புலிகளால் சிறைபிடிக்கப்பட்டு, அவர்களின் காவலில் இருந்து நீண்ட காலத்தின் பின்னர் விடுதலையான கொமடோர் அஜித் போயகொட தனது அனுபவங்களைச் சொல்லச் சொல்ல சுனிலா கலப்பதி அதனை எழுதி Long Watch நூலாக வெளிவந்தது. இதனை தேவா 'நீண்ட காத்திருப்பு'(2020) என்ற தலைப்பில் மொழிபெயர்த்தார். சிறை அனுபவங்களையும், சிறை மீண்ட பின்னர் அரசாங்கம் நடந்து கொண்ட முறையையும் அவர் இந்த நூலிலே தந்துள்ளார். அம்பரய, என்பெயர் விக்டோரியா, நீண்ட காத்திருப்பு ஆகிய நூல்கள் வடலி வெளியீடாக வெளிவந்துள்ளன.

இந்த ஐந்து நூல்களிலும் தேவாவின் துல்லியமான, வாசகரிடத்தில் ஒத்துணர்வைத் தொற்ற வைக்கும் மொழிபெயர்ப்பைத் தரிசிக்கலாம். அந்தந்தச் சூழலை உணரச் செய்து, பாத்திரங்களை எமக்கு நெருக்கமாக்கத்தக்க எளிமையான நடை அந்த நூல்களுடன் எம்மை ஒன்றச் செய்து விடுகின்றது. இதுவே ஏனைய மொழிபெயர்ப்பாளரிடமிருந்து தேவாவை வேறுபடுத்துவதாகும்.

எட்வர்டோ கலியானோ எழுதிய "லத்தீன் அமெரிக்காவின் பிளவுண்ட இரத்த நாளங்கள்", காலித் ஹுசைனி எழுதிய "ஓராயிரம் ஒளிரும் சூரியன்"ஆகிய நூல்களையும் அவர் மொழிபெயர்த்திருந்தார். எனினும் அவை இன்னமும் நூல்களாக வெளிவரவில்லை. தேவா பணி ஓய்வின் பின்னர் இலங்கை திரும்பி மனைவியுடன் தலைமன்னாரில் வசித்து வந்த நிலையில் நோய்வாய்ப்பட்டிருந்து மரணத்தைத் தழுவினார். ஓர் இலக்கியச் செயற்பாட்டாளராக, விமர்சகராக, தமிழ்ச் சூழலுக்கு நெருக்கமான படைப்புகளை மொழிபெயர்த்தவராக, பழக இனியவராக, நல்ல மனிதப் பண்புகள் கொண்டவராக எம்மிடையே வாழ்ந்தவர் தேவா. அவரது படைப்புகளை வாசிக்குந்தோறும் தேவாவை நாம் தரிசிக்கலாம்.


திருச்செல்வம் தேவதாஸ்




உள்ளே கொடுநாகம்
உதட்டோரம் பட்டாம்பூச்சி
உழறும் முகங்களோ...
கறுப்புக் கண்ணாடிக்குள்

ஆயிரம் பொய்களின் அணிவகுப்பில்
அசத்தலாய் பல வேடங்கள்
புதையலைக் காக்கும் பூதங்களுக்கு
புதையுண்டவை எப்படிப் புரியும்

குப்பைக் கூடைகள் நாகரிக
தொட்டில்களாய் கொலுவிருக்க
அசுத்தமாகியது கூடம் மட்டுமல்ல
மனித மனமும் தான்

இதயச் சிலம்பை உடைக்கும்போது
உள்ளே இருப்பது புரிய
இது ஒன்றும் பாண்டியன் சபையல்ல
இமயத்தை தாங்கினாலும்
இதயச் சுமையை...

இருண்ட மனங்களில் இறக்கை விரித்து
பிடித்த சலுகை கிடைத்த போதெல்லாம்
இருக்கை போடும் இயந்திரங்களுக்கு
இளந்தென்றலும் கடும்புயலும் புரியும்

கட்டிய அணைக்கட்டை
அவ்வப்போது உடைப்பெடுக்கும் வெள்ளம்
உதிரிகளை மட்டும் அள்ளிச் செல்வதில்லை
உதவாததையும் விட்டுச் செல்லும்

தேய்ந்துபோய் உருக்குலைந்து
தெருவில் நிற்கும் கனவுக் குதிரைகள்
கடிவாளத்தை எங்கே தேடும்

வேலணையூர் மயிலைவக்கிளி

## உணர்விழந்த தேசத்தில்...!

வாலிபத் தியாகங்களால்
வலிமை கண்ட தேசத்தில்
போலிகள் தலைமையேற்க
வேலிகள் தகர்ந்து போகும்!

பச்சை மயமாகிப்
பாதீனியப் படைகள்
கச்சையுடன் சென்றவரை
கம்பீரமாய் நிறுத்தும்!

கட்சிசார் பட்சி சில
கத்திக் கரைந்து போகும்!
ஊடக ஊது குழல்
ஊதிப் பெருப்பிக்கும்!

வரிந்து கட்டியே
பிரிந்து நிற்கின்ற
தரித்திர அரசியலால்
விரித்த வலை வீழும்!

இரா.ஜெயக்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெடுக்குநாறி மலையில் வாழும் ஆதிலிங்கமே
மிடுக்குடனே நாம் வாழ அருளும் தெய்வமே
காட்டினிலே இருந்தாலும் கருணைத் தெய்வம்
நீ காட்டுகின்ற கருணையினால் உலகமுய்யும்
பாட்டினிலே உன்புகழைச் சொல்லவேண்டும்
பரவசமாய் உடுக்கடித்து ஆடவேண்டும்
சொத்தெனவே எங்களுக்கு வாய்த்தவரே

பல சித்தர்களை ஞானிகளை கண்டவரே
தொல்பொருள் திணைக்களத்தின் தொல்லையிருக்க
தோன்றாப் பெருமையனே
எதற்கும் எல்லையிருக்கு
கல்லினிலே சிலைவடித்து வாழ்ந்த
காலத்தை அதில் பொறித்து
நல்லாட்சி செய்தார்கள் எம்மவர்கள்
அந்நிலைமை எப்போது வருமையா?
ஏங்குகின்றோம் எதற்கும் முடிவுவரும்...

- கணேபாக்கியன்



சஞ்சீவி
காத்திருக்கிறது.
நீங்களும் எழுதலாம்
• சிறுகதை
• கவிதை
• கட்டுரை
• பத்தி எழுத்து
• ஓவியம்
• துணுக்கு
அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
sanjeevi@uthayan.com
077 316 5555
அனுப்பி வைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## (தொடர்ச்சி) காணியை

வில்லை.பல இழுபறிகளுக்கு மத்தியில் அரசியல்வாதிகள் அதிகாரிகளின் பொறுப்பற்றதன்மையால் மதகுவைத்தகுளத்தில் பொருத்தமில்லாதஇடத்தில் பொருளாதார மத்தியநிலையம் அமைத்துமுடிக்கப்பட்டது. இந்தக்கட்டுரை எழுதிக்கொண்டிருக்கும் வரை அது விவசாயிகளின் பயன்பாட்டுக்காக வழங்கப்படவில்லை.எனினும் தாண்டிக்குளம் பகுதியில் அதற்கான காணி ஒதுக்கப்பட்டிருந்தால் இந்தநிலைமை வராமல் தடுத்திருக்கலாம்.நகரமும் வளர்ச்சியடைந்திருக்கும். அரசநிதியும் வீணடிக்கப்பட்டிருக்காது.

அத்துடன் வெறும் 5 ஏக்கர் காணியே அப்போது கோரப்பட்டது. அதற்கான அனுமதியினை மறுத்துவிட்டு தற்போது 65 ஏக்கர் காணியினை விடுவிப்பதற்கு எந்தஅடிப்படையில் தீர்மானம் நிறைவேற்றினார்கள் என மக்கள் குழப்பமடைந்துள்ளனர். இதேவேளை2016 ஆம் ஆண்டு வடக்குமாகாணசபை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஆளுகையில் இருந்தது. அன்றைய முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரனும், விவசாயஅமைச்சரான பொ.ஐங்கரநேசனும் இந்தக்காணியினை விடுவிக்ககூடாது என்பதில் உறுதியாகவிருந்தனர். அதற்குப் பலகாரணங்கள் இருந்தன.தற்போது சபையின் ஆட்சிக்காலம் நிறைவுபெற்று ஆளுநரிடம் அதிகாரம்சென்றுள்ள நிலையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேபோல வவுனியாவில் தேசிய தரத்திலான துடுப்பாட்ட மைதானம் ஒன்றை அமைப்பதற்கும் இந்தக்காணி கோரப்பட்டிருந்தது. அதற்கும் அனுமதி வழங்கப்படவில்லை. மேற்குறிப்பிட்ட இரண்டு சந்தர்ப்பங்களிலும் காணியை வழங்கக்கோரி ஆர்ப்பாட்டங்கள் கூட முன்னெடுக்கப்பட்டிருந்தன. எனினும் அதற்குப் பலன்கிட்டவில்லை. எனவே தற்போது அந்தக்காணியை விடுவிப்பதற்கான நோக்கம் தொடர்பில் பலருக்கும் சந்தேகம் எழுந்துள்ளது. பல வருடங்களாகியும் திறக்கப்படாமல் பாழடைந்துபோகும் பொருளாதாரமத்தியநிலையம் ஒருபுறம், ஓமந்தையில் அமைக்கப்பட்டுஅரைகுறையில் உள்ள சர்வதேச விளையாட்டு மைதானம் மறுபுறம் என கோடிக்கணக்கான மக்கள் பணம் வீணடிக்கபட்டுள்ள நிலையில் , மீண்டும் ஒரு பிழையான தீர்மானத்தினை எடுக்கின்றார்களா என்ற மனக்கிலேசம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

### தனியாருக்கு வழங்க முயற்சி

இதேவேளை குறித்த 65 ஏக்கர் காணியில் ஒரு பகுதி தெற்கினைச் சேர்ந்த பிரபல தனியார்நிறுவனம் ஒன்றுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது மேலும் விடயத்தை பூதாகாரமாக்கியுள்ளது. மாவட்ட விவசாயச் சம்மேளனத்தினைச் சேர்ந்தவர்கள் அது தொடர்பில் தகவல்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

அத்துடன் அண்மையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், தனியார் நிறுவனங்களுக்கு அந்தக்காணியினை வழங்குவதை அனுமதிக்கமுடியாது என்ற கருத்தினைத் தெரிவித்திருந்தார். எனினும் அவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறவில்லை என அதிகாரத்தரப்பால் தெரிவிக்கப்படுகின்றது. நெருப்பில்லாமல் புகையாது என்பது போல அரச காணியினைப் பிடுங்கி , பெருமுதலாளிகளிடம் ஒப்படைக்கும் திட்டமேதும் இடம்பெறப்போகின்றதா என்ற அங்கலாய்ப்பும் மக்கள் மத்தியில் உள்ளது.

### திட்டமிடப்படாத நகரம்

வவுனியா மாவட்டம் முறையற்ற நகரக் கட்டமைப்பைக் கொண்டுள்ளது. நீண்டகாலப் போரும் அதற்கு ஒரு காரணம். அதன்விளைவால் ஏற்பட்ட குடியகல்வு அந்தக்காலத்தில் இருந்த நிர்வாகக் கட்டமைப்புக்களால் நகரம் திட்டமிடப்படாத வளர்ச்சியை அடைந்துள்ளது. வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் அந்த நிலைமையை உணர முடியும். இதனால் முக்கியமான தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு தேவையான அரசநிலம் நகருக்குள் இல்லை. இது ஒரு நீண்டகாலப்பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இது நகரின் வளர்ச்சிக்கும் தடையாக இருக்கின்றது.

குறிப்பாக அரசநிறுவனங்களான நன்னீர் மீன் வளர்ப்புத் திணைக்களம், நீர்வழங்கல் திணைக்களம் , அரசஒசுசல, பனைஅபிவிருத்திசபை, தெங்குப்பயிர்ச்செய்கை அபிவிருத்திச்சபை, மத்தியசுற்றாடல் அதிகாரசபை மற்றும் தனியார் அமைப்புகளான வர்த்தகர்சங்கம், முச்சக்கர வண்டிஉரிமையாளர் சங்கம் போன்றவற்றுக்கான அலுவலகங்களை அமைப்பதற்கு நகரில் காணிகள் இல்லை. தங்களுக்கு காணிவழங்குமாறு தொடர்ச்சியாக இந்த அமைப்புகளும், திணைக்களங்களும் கோரிவருவதாக வவுனியா பிரதேசசெயலகத்தால் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் அவர்களுக்கு வழங்குவதற்கு ஒரு துண்டுநிலம்கூட இல்லை.

### வாகனத்தரிப்பிடம் இல்லை

நகரமத்தியில் பொதுமக்களுக்கான வாகனத்தரிப்பிடவசதி நிவர்த்தி செய்யப்படவில்லை.இது பெரும் குறையாகவுள்ளது. பிரதானமாக வவுனியா பொது மருத்துவமனைக்கு வருகைதருவோர்,நகரத்துக்குள் செல்வோர் வாகனங்களை நிறுத்துவதற்கு பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். வீதியின் இருமருங்கிலும் வாகனங்களை நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசலும் ஏற்படுகின்றது. விபத்துகளுக்கும் குறைவில்லை. இருசக்கரவாகனங்களுக்குத் தரிப்பிடம் இருந்தாலும் அதன் சேவை போதுமான அளவில் இல்லை. ஆனால் திட்டமிட்ட அபிவிருத்திகளை மேற்கொண்டால் இந்த நிலையை மாற்றமுடியும். மாவட்டசெயலகத்துக்கு அருகில் காணப்படும் அரசஅதிபருக்கான விடுதிவளாகத்தில் போதிய காணிஉள்ளது. அங்கு நகர மத்தியை உள்ளடக்கிய வாகனத்தரிப்பிடம் ஒன்றை அமைக்கலாம். அது மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். எனினும் அது தொடர்பில் பரிசீலிக்கப்படவில்லை. அத்துடன் வவுனியா மாவட்ட செயலகத்துக்கு நிரந்தரமான ஒரு கட்டடம் இல்லை. ஒவ்வொரு திணைக்களத்துக்கும் தனித்தனிக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.


நாட்டில் அதிக சிறிய கட்டடங்களைக் கொண்ட மாவட்டச்செயலகம் என்ற 'பெருமை' வவுனியாவுக்குண்டு. எனினும் 6 மாடிகளைக் கொண்ட பொதுவான கட்டடம் ஒன்று விரைவாக அமைக்கப்படும் என்று முன்னாள் அரசஅதிபராகக் கடமையாற்றிய எம்.ஹனீபா கடந்த 2019 ஆம் ஆண்டு தெரிவித்திருந்தார் , ஆனால் அது இன்னும் இடம்பெறவில்லை.அப்படி நடந்தால் போதியளவு நிலங்களை வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்திக்கொள்ளமுடியும்.

### ஜோசப் இராணுவமுகாம்

இதேவேளை கூட்டுப்படைகளின் வன்னித் தலைமையகம் என்று அழைக்கப்படும் ஜோசப் இராணுவமுகாம் நகருக்கு அண்மையில் விசாலமான பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது.அந்த முகாமுக்குள் இரு விவசாயக் குளங்களும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. போர் மற்றும் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி சிறுதொகைப் பணத்தினை வழங்கி 30 வருடங்களுக்கு முன்பாக அந்தக்காணிகளை இராணுவம் பொதுமக்களிடம் இருந்து கையகப்படுத்தியிருந்தது. அந்த காணிகளின் தற்போதைய பெறுமதி பல இலட்சங்களாகும். எனினும் இராணுவக் கட்டமைப்புகளோ, கட்டடங்களோ அமைக்கப்படாத பெருமளவு பகுதி தற்போதும் அந்தமுகாமில் உள்ளது. ஒரு பகுதியில் இராணுவம் விவசாயத்தையும் செய்கின்றது. சிலபகுதிகள் அழகுபடுத்தலுக்காக மட்டுமே பயன்பாட்டில் உள்ளன. எனவே 'விவசாயநிலம் நகரத்தில் எதற்கு?' என்ற கேள்வியை எழுப்புவோர் , இராணுவமுகாம் நகரத்தில் உள்ளமை தொடர்பாகவும் கரிசனைகொள்ளவேண்டும். கிளிநொச்சி நகரிலும் இந்தநிலைமை இருப்பதை அவதானிக்கமுடியும்.

### அக்கறையில்லாத பிரதிநிதிகள்

நகரஅபிவிருத்தி, திட்டமிடல் போன்ற விடயங்களில் மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகளும் அரச அதிகாரிகளும் பொறுப்புடன் செயற்படவேண்டும். இலாபநோக்கத்தினையும்,அரசியல் சுயஇலாபங்களையும் புறம்தள்ளி தூரநோக்கத்தையும் மக்கள் நலனையும் கருத்திற்கொள்ளவேண்டும்.அப்போதே ஒரு அபிவிருத்தித் திட்டம் முழுமையடையும். முடிவுகளை எடுக்கும் போது மக்களின் கருத்துக்களையும்,பொதுஅமைப்புக்களின் அபிப்பிராயங்களையும் கணக்கில் கொள்ள வேண்டும். அதன் மூலம் எடுக்கப்படும் பொதுத்தீர்மானம் ஒன்றே இந்த 65 ஏக்கர் விவசாயக்காணி விடயத்தில் சாலப்பொருத்தமானதாக இருக்கும்.



# இனியெல்லாம் பயங்கரவாதமே!

*'டெய்லி மிரர்' பத்திரிகையில், ரங்க ஜெயசூரியா எழுதிய கட்டுரையின் தமிழாக்கத்தின் சுருக்க வடிவம் இது.*

○ ந.பரமேஸ்வரன்

பயங்கரவாதம் தொடர்பாக சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணத்தை எல்லா நாடுகளும் அப்படியே பின்பற்றுவதில்லை. ஒவ்வொரு நாடும் தமது அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கத்துடன் தமது செயற்பாடுகளுக்கு சட்டத்தை ஒரு கருவியாகப் பாவிக்கின்றன. இந்தச்செயற்பாடு இவர்களுக்கு வழங்கப்பட்ட ஆணையை மீறும் செயல்.

பயங்கரவாத தடைச்சட்டத்துக்குப் பதிலாகக் கொண்டு வரப்படவுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் குறுகிய கண்ணோட்டத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதம் தொடர்பான தெளிவான சட்டபூர்வ விளக்கத்தை இதில் காண முடியவில்லை. அரசியல்,பொருளாதார,மதரீதியான நோக்கங்களைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் தீவிரவாத நடவடிக்கைகள், வன்முறைபயங்கரவாதம் எனக் கூறப்படுகின்றன.

உதாரணமாக அரசியல், பொருளாதார,மதரீதியான நோக்கங்களைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் தமது அமைப்புகளுக்கு ஆதரவு திரட்டுதல்,திட்டமிடுதல் ,அரச நிர்வாக நடவடிக்கைகளைத் தடுத்தல்,அத்தியாவசிய சேவைகளுக்கு இடையூறு செய்தல்,பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தல், சட்டவிரோத கூட்டத்தில் கலந்து கொள்ளுதல் போன்ற விடயங்கள் பயங்கரவாதமாக கருதப்படுகின்றன. இதன்மூலம் தெளிவாகிற விடயம் என்னவென்றால் தொழிற்சங்க நடவடிக்கைகள், பணிப்புறக்கணிப்புகள் ,எதிர்ப்பு ஊர்வலங்கள்,பேரணிகள் யாவும் பயங்கரவாதமாகவே இனிக் கருதப்படும்.

இது தற்போது கொண்டு வரப்படவுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமானது, மக்கள் இப்போது அனுபவித்துக்கொண்டிருக்கும் தமது சட்டபூர்வ உரிமைகளை நிலை நாட்டுவதற்காக போராட வேண்டிய (மக்களை பயங்கரவாதிகளாக மாற்றக்கூடிய) சூழலை ஏற்படுத்தும். புதிய சட்டத்தின் மூலம் வேலை நிறுத்தம் செய்யும் ஒருவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கக்கூடிய நிலைமை காணப்படுகிறது.

கடந்த காலங்களில் அல்லது தற்போது உள்ள சட்டங்களின் படி வேலை நிறுத்தம் மூலம் ஒரு பரந்து பட்ட அலையை அல்லது மக்கள் எழுச்சியை உருவாக்கக்கூடிய நிலை காணப்படுகிறது. ஆனால் புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தின் கீழ் இவை யாவும் பயங்கரவாதமாக கருதப்படும்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் ஊடக சுதந்திரத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாகக் காணப்படுகிறது. யாராவது ஓர் அறிக்கையையோ வாசகங்களையோ பிரசுரித்தால் அல்லது காட்சிப்படுத்தினால் அது நேரடியாகவோ மறைமுகமாகவோ பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதாக இருந்தால் அது பயங்கரவாதமாக கருதப்படும்.

பயங்கரவாதம் தொடர்பாக தெளிவான வரைவிலக்கணம் இல்லாவிட்டால் அது பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதாகக் கருதப்படும்.

பொலிஸ்மா அதிபரின் பரிந்துரையின் கீழ் பொலிஸ்மா அதிபர் பரிந்துரை செய்யும் அமைப்புகளை ஜனாதிபதி தடை செய்யலாம்.1987- 90 காலப் பகுதியில் இது தான் நடந்தது.ஜே.ஆர். பல இடதுசாரி அமைப்புகளைத் தடை செய்தார். இறுதியில் இது ஜே.வி.பி.கிளர்ச்சிக்கு வழி வகுத்தது.அரசியல்வாதிகளின் தவறான செயற்பாடு நீடித்த வன்முறைக்கு வழி வகுத்தது.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம், பயங்கரவாத தடைச்சட்டத்தை பல சந்தர்ப்பங்களில் மீறுகிறது.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தில் பயங்கரவாதம் என்பதற்கு நீண்ட வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் ஆட்சியாளர்கள்'தடுத்து வைத்தல் ' என்ற விடயத்தை துஷ்பிரயோகம் செய்வதற்கும் வாய்ப்புள்ளது. தற்போதைய அரசாங்கத்தின் குறுகிய கால நலன்களுக்காக, அச்சுறுத்தும் பாணியில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இது உதவும். இப்படியான செயற்பாடுகள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடும். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் போன்ற தாக்குதல்களுக்கும் வழி வகுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுமைதாங்கிகள் சாய்கின்றன

○ கோகுலராகவன்

அண்மையில் வல்லிபுர ஆழ்வார் ஆலயம் சென்று முள்ளிச் சந்தியால் திரும்பி வரும் போது சுமைதாங்கிக் கல் ஒன்றை அவதானிக்க முடிந்தது.

இது சிமெந்து, கல் ,மண் போன்றவற்றால் அமைக்கப்பட்டுள்ளது. சுமை தாங்கிக் கல் வழிப்போக்கர் தமது தலைச்சுமையை நின்றபடி நகர்த்தி வைக்க ஏதுவாக வீதி ஓரமாக அமைக்கப்படும் ஒருவகை உயரக் கல் மேடை. இன்றைய தரைப் போக்குவரத்து வளர்ச்சி அடைந்து கிட்டதட்ட அறுபது வருடம் தானிருக்கும். அதற்கு முன் மனிதனின் பிரதான போக்குவரத்து முறை நடை தான். கொஞ்சம் வசதியானவர்கள் மாட்டு வண்டி வைத்திருந்தார்கள் .இது எல்லோருக்கும் வாய்க்காது. ஆகவே நடைதான். சந்தைக்குப் பொருட்களை பெரிய பனை ஓலைக் கடகங்களில் வைத்து சுமந்து கொண்டு செல்வார்கள். இடையில் களைப்பு நீங்க இந்தச் சுமை தாங்கி உதவும். அநேகமாக சுமைதாங்கிக்கு அருகில் கிணறு, சிறிய மடம் போன்றவையும் அமைக்கப்பட்டிருக்கும்.




கிணற்றில் முகம் கழுவி, தண்ணீர் குடித்து மடத்தில் கொஞ்சம் படுத்து இளைப்பாற முடியும். இதுவே புண்ணியம்.

இந்த சுமைதாங்கிகள் இறந்து போன கர்ப்பிணிகள், போர்வீரர்கள் , தனவந்தர்கள் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டது. சிலவேளை வளர்த்த பசுமாடு இறந்ததற்காகவும் சுமைதாங்கி அமைக்கப்பட்டதாகவும் குறிப்புண்டு.

தென்மராட்சியில் கச்சாய், வார்வட்டன் தெருவில் சங்கிலிக் கிணற்றடியில் சுமைதாங்கி ,கிணறு , மடத்தின் தூண்கள் ஆகியவை இப்போதும் இருக்கின்றன.

மடம் கூரை அமைக்கப்படவேண்டும். சாவகச்சேரி சிவன் கோவில் முன்பாக 1961 இல் அமைக்கப்பட்ட கிணறும் சுமைதாங்கியும் இப்போதும் உள்ளன. இந்த இடத்தில் இது அமைக்கப்பட்ட காரணம் புரியவில்லை. சிலவேளை வயல் வேலை செய்பவர்களின் இளைப்பாறுகைக்காக அமைத்திருக்கக் கூடும்.

இந்தச் சுமைதாங்கிகள் அநேகமாக யாழ். மாவட்டத்தில் ஆயிரத்துக்கும் அதிகமாக அமைக்கப்பட்டதாக அறிய முடிகிறது. தற்போது இவை மிகக்குறைவாகவே காணப்படுகின்றன.

வீதி அகலிப்பின் போது நிறைய சுமைதாங்கிகள் இடிபட்டு போய்விட்டன. மேலும் சில கள்ளக்காணி பிடிப்பவர்களால் உள்வாங்கப்பட்டிருக்கலாம்.

இதனால் இவற்றைத் தொல்பொருள் திணைக்களம் தனது உரித்துச் சான்றிதழ்களை இதில் பதித்து தொல்பொருளாக பதிந்துள்ளமை நல்லதொரு விடயம்.

இன்றைக்கு சமூகக் கட்டுமானம் தளர்ந்து போன நிலையில் இத்தகைய சுமை தாங்கிகள் அமைக்கும் பணிகள் நிகழ்வதாகத் தெரியவில்லை. ஒரு வாய்க்காலை வெட்டக்கூட நாம் நேரம் ஒதுக்கத் தயாரில்லை.

இதனால் வெள்ளம் வீட்டுக்குள் வருவதைக் கண்டு யாரையோ திட்டுவோம். யாரோ ஒருவர் தம் உறவினர் ஞாபகார்த்தமாக கட்டிய பஸ் நிலையத்துக்குள் எந்த வித மனச்சாட்சியும் இன்றி சுவரொட்டி ஒட்டுவோம்.

ஆனால் முன்னைய காலகட்டத்தில் கிராம நிர்வாகம் சிறப்பாகவே செயற்பட்டிருக்கிறது. நிறையப் பொதுக்கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. (இவை தற்போது அண்டிய காணிக்காரர்களால் மூடி அடைக்கப்பட்டுள்ளமை வேறு விடயம் ) வெள்ள வாய்க்கால்கள் முறையாகத் தூர்வாரப்பட்டன. வெள்ள வழித்தடத்தை அறிந்தவராக கிராம மக்கள் இருந்தனர். கிராம சங்கத் தலைவர் மதிக்கப்பட்டார்.மதிப்பு மிக்கவராகவும் இருந்தார்.

இதுவே கிராமத்தின் அழகு. ஒருவர் சொல் ஊருக்குள் பெறுமதி மிக்கதாக இருந்தது.

காந்தி சொன்னார் "கிராமங்களே இந்தியாவின் பொருளாதாரத்தைத் தீர்மானிக்கின்றன"என்று பிரபல்யமான சிங்கள எழுத்தாளர் மார்ட்டின் விக்கிரமசிங்கா "கம்பெரலியாவில் கிராம வாழ்க்கை அழகானது "என்று இதற்காகவே சொன்னார். கிராமங்கள் இப்பொழுது இரண்டுங்கெட்டானாக மாறி விட்டன. சுமை தாங்கிகள் சாய்ந்து விட்டன.

# யாழ்ப்பாண வரலாறு

1505-1948 வரை

○ ந.பரமேஸ்வரன்

## 1931 மே

யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸின் கோரிக்கையை அடுத்து சட்ட மன்றத் தேர்தல் புறக்கணிப்பில் தமிழ் அரசியல்வாதிகள் ஈடுபடுவதை விடுத்து பொருளாதாரப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதே பொருத்தமானது என அப்போது அரசாங்க அதிபராக பதவி வகித்த T.டைசன் கூறினார். 'அந்நிய உற்பத்திகளை நிராகரித்து விட்டு உள்ளூர்த் தயாரிப்புகளைப் பயன்படுத்துங்கள் இது உடல் ஆரோக்கியத்துக்கும் உகந்தது . அத்துடன் உள்ளூர் உற்பத்தி பெருகவும் வாய்ப்பு ஏற்படும். நீங்கள் சீனியை நிராகரித்து விட்டு பனங்கட்டியைப் பயன்படுத்துங்கள். மண்ணெண்ணெயை நிராகரித்து விட்டு தேங்காயெண்ணெயைப் பயன்படுத்துங்கள். சிகரெட்டை நிராகரித்து விட்டு சுருட்டை பயன்படுத்துங்கள் என பிரித்தானியரான அரசாங்க அதிபர் டைசன் யாழ்ப்பாண மக்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

## 1931 செப்ரெம்பர் 10

ரிக்சாக்காரர்கள் ரிக்சாக்களை நிறுத்துவதற்கு யாழ்ப்பாண நகரப்பகுதியில் போதிய இடவசதியில்லை எனக்கோரி பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாண நகர அபிவிருத்திச்சபைக்கூட்டத்தில் இந்த விடயம் கலந்துரையாடப்பட்டு ரிக்சாக்காரர்கள் தமது ரிக்சாக்களை நிறுத்துவதற்கு மேலதிக இடம் ஒதுக்குவதென தீர்மானிக்கப்பட்டது.

## 1931 செப்ரெம்பர் 20

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடைய நேரடி தொலைபேசி வசதி ஏற்பாடு செய்யப்பட்டது.

## 1931 செப்ரெம்பர் 27

முதல் காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு செல்லும் முதல் புகையிரதமும் கொழும்பிலிருந்து காங்கேசன்துறை செல்லும் புகையிரதமும் முறிகண்டியில் தரித்துச்செல்ல வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## 1931 டிசெம்பர் 10

இந்து மதம் பற்றிய பிரசங்கங்கள் நாடு முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்டன. டிசெம்பர் பத்தாம் திகதி காலி பௌத்த இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் அந்தச்சங்கத்தில் இந்து மதம் பற்றிய பிரசங்கம் நடைபெற்றது.

பிரசாரக்குழுவினருக்கான தங்குமிட ஒழுங்குகள் காலி மஹிந்த கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

## 1931 டிசெம்பர் 10

யாழ்ப்பாண நகர்ப்பகுதிக்கு மின் பிறப்பாக்கி மூலம் மின்சாரம் வழங்கப்பட்டது. யாழ்ப்பாண நகர அபிவிருத்தி சபைத்தலைவர் சிவகுருநாதர் மாலை 6.00 மணிக்கு ஆளியை (switch) அழுத்தி மின்சாரத்தைப் பாய்ச்சினார். இந்நிகழ்வில் நகரசபை உறுப்பினர்களும் பெருமளவான பொதுமக்களும் கலந்து கொண்டனர். யாழ்ப்பாண நகர்ப்பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கு 280,000 ரூபா செலவிடப்பட்டது.Walker and Sons நிறுவனம் மின்சாரம் வழங்கும் ஒப்பந்தத்தைப் பொறுப்பேற்றிருந்தது. முதல் கட்டமாக நூறு வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டது.

## 1931 டிசெம்பர் 14

தெல்லிப்பழையில் நூல் நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டது.

## 1931. டிசெம்பர் 2023

1931ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வடமாகாணம் முழுவதும் பெய்த கடும் மழை காரணமாக பல வீடுகள் சேதமடைந்தன.போக்குவரத்து பாதிக்கப்பட்டது.தண்டவாளத்தின் மேலாக வெள்ளம் பாய்ந்தமையால் புகையிரத சேவை நிறுத்தப்பட்டது.நெடுந்தீவில் சுடலையில் புதைக்கப்பட்டிருந்த பிணங்கள் வெள்ளத்தில் மிதந்தன.

## 1931 ஜனவரி

காந்தி,நேரு உட்பட்பல பெண்கள் ,சிறுவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் கண்டனக்கூட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தது. வண்ணை வெங்கடேசப்பெருமாள் கோயிலில் பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் நடேசபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் , கைது நடவடிக்கைக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக பிரித்தானிய உற்பத்திகளைப் பகிஷ்கரிப்பது என முடிவெடுக்கப்பட்டது. கூட்ட முடிவில் யாழ்ப்பாணப் பிரதிநிதிகள் சட்டசபையை புறக்கணித்தமைக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டதுடன் பிரிட்டிஷ் அரசு விடுக்கும் அச்சுறுத்தல்களுக்கு அடிபணியக்கூடாது எனவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

## 1932 பெப்ரவரி

இளைஞர் காங்கிரஸ் .இலங்கைக்கான தேசியக்கொடியொன்றை தயாரித்தது. மூன்று இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் மூவர்ணக்கொடியாக இந்தக்கொடி அமைந்திருந்தது. சிவப்பு,பச்சை,ஊதா நிறங்களை உள்ளடக்கியதாக கொடி வடிவமைக்கப்பட்டிருந்தது.

ஊதா நிறம் அர்ப்பணிப்பை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது நாமனைவரும் இலங்கையின் விடுதலைக்காக எம்மை அர்ப்பணிக்க வேண்டும். சிவப்பு தியாகத்தை வலியுறுத்துகிறது. பச்சை நம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது என கொடியேற்ற விழாவில் விளக்கமளிக்கப்பட்டது.

வெளிநாட்டு உற்பத்திகளைப் புறக்கணிக்கும் இளைஞர் காங்கிரஸின் தீர்மானத்திற்கு கத்தோலிக்க திருச்சபை எதிர்ப்புத் தெரிவித்தது.

(வரலாறு நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org